# <u>பொருளடக்கம்</u>


| இயல் எண் | தலைப்பு | பக்கம் எண். |
|---|---|---|
| | முகவுரை | 1-4 |
| 1 | பொது விநியோகத்திட்டம் | 5-34 |
| 2 | நுகர்வோர் பாதுகாப்பு | 35-45 |
| 3 | விலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் | 46-49 |
| 4 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 50-85 |
| 5 | தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் | 86-97 |
| 6 | அமலாக்கம் | 98-102 |
| | முடிவுரை | 103 |

## முகவுரை

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு அளிப்பதில் அரசு உறுதி பூண்டுள்ளது. இந்த இலக்கை அடைய அரசு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தினை பொருளாதார வேற்றுமை உணர்வு இன்றி அனைத்து குடும்பங்களும் பயன்பெறுமாறு நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டம் உணவுப் பாதுகாப்பை வழங்கும் சிறந்த திட்டம் என அனைவராலும் பாராட்டப்பட்டுள்ளது.

நியாயவிலைக் கடைகளுக்கு குறித்த நேரத்தில் பொருட்களை விநியோகிக்கவும் அதனை சிறந்த முறையில் கண்காணிக்கவும் தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டம் முழு கணினிமயமாக்கப்பட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிப்பதற்கு ஏதுவாக அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் விற்பனை முனைய இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இது போலி குடும்ப அட்டைகள் மற்றும் போலிப்பட்டியல்கள் ஆகியவைகளை களைவதற்கும் பொது

விநியோகத்திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்படும் அரிசி மற்றும் இதர பொருட்களை முறைப்படுத்தவும் உதவியாக உள்ளது.

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தினை நேர்த்தியான முறையில் நிறைவேற்றுவதற்காக மாநில உணவு ஆணையம் தலைவர் மற்றும் 5 உறுப்பினர்களைக் கொண்டு 16.02.2018 அன்று ஏற்படுத்தப்பட்டது.

பொது விநியோகத் திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் அத்தியாவசியப் பொருட்களை கொள்முதல் செய்தல், சேமித்து வைத்தல் மற்றும் வழங்குதல் ஆகிய பணிகளை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மேற்கொள்கின்றது.

தமிழ்நாடு சேமிப்புக்கிடங்கு நிறுவனம் நவீன முறையிலான சேமிப்பு வசதிகளை விவசாயிகள் மற்றும் இதர வியாபார நிறுவனங்களுக்கு வழங்கும் பணிகளை மேற்கொள்கின்றது. அத்துடன் இந்நிறுவனம் சேமித்து வைக்கப்படும் பொருட்களின் இழப்பினை கட்டுப்படுத்துவதையும் பொருட்களின்

சேமிப்புத் திறனை மேம்படுத்துவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டு, சேமிப்புக் கிடங்குகளைக் கட்டியும், இயக்கியும் வருகிறது.

நுகர்வோர் பாதுகாப்பு என்பது இத்துறையின் மிக முக்கியத்துவம் வாய்ந்த அங்கமாக விளங்குகிறது. நுகர்வோரின் பாதுகாப்பிற்காக போதிய அதிகாரத்துடன் கூடிய தகுதி வாய்ந்த நுகர்வோர் குறைதீர் ஆணையங்கள் அமைக்கப்பட்டு அதன் மூலம் நுகர்வோர் குறைகள் உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்பட்டு நுகர்வோரின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது.

தமிழ்நாடு அரசு விலைக் கண்காணிப்புக் குழு ஒன்றை மாநில அளவில் அமைத்து அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வினை கண்காணித்து கட்டுப்படுத்த காலமுறைப்படி கூட்டம் நடத்தி உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

அத்தியாவசியப் பொருட்களின் பதுக்கல் மற்றும் கடத்தலை தடுக்க குடிமைப் பொருள் வழங்கல்

குற்றப்புலனாய்வுத் துறையின் அமலாக்கப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

நீடித்த வளர்ச்சி இலக்குகளை எய்திடும் வகையில் நம் மாநிலத்தில் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வரும் அனைவருக்குமான பொது விநியோகத்திட்டத்தின் மூலம் பசியினை முற்றிலுமாக போக்குவதுடன், அனைவருக்குமான உணவு பாதுகாப்பினை உறுதி செய்கிறது.

## இயல் 1

## பொது விநியோகத் திட்டம்

### 1.1 முன்னுரை

தமிழ்நாடு அரசு, மாநிலத்தின் அனைத்து மக்களுக்கும் உணவுப் பாதுகாப்பு அளிப்பதனை தலையாய கடமையாகக் கொண்டுள்ளது. இதனை நிறைவேற்றும் வகையில், தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-ஐ நடைமுறைப்படுத்திய பிறகும் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தையும் அதன் தன்மை மாறாமல் செயல்படுத்தி வருகிறது. பொருளாதார அடிப்படை அல்லது சமூக நிலையில் எவ்வித வேறுபாடின்றி அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பொது விநியோகத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளதால், நம் மாநிலத்தின் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் பெரும் பாராட்டுதலைப் பெற்றுள்ளது.

தமிழ்நாட்டில் 01.11.2016 முதல் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 அமல்படுத்தப்பட்டது.

இதன்படி, தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்ட அளவின் அடிப்படையில் அரிசி வழங்கப்படுவதுடன், ஏற்கனவே குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அரிசியின் அளவை குறைவு செய்யாமலும், அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் தன்மை மாறாமலும் தொடர்ந்து இத்திட்டமானது செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் 01.06.2011 முதல் விலையில்லா அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013-ஐ சீரிய முறையில் செயல்படுத்திட ஏதுவாக தலைவர் மற்றும் ஐந்து உறுப்பினர்கள் அடங்கிய மாநில உணவு ஆணையம் உருவாக்கப்பட்டது. இவ்வாணையம் 16.02.2018 முதல் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு பொது விநியோகத் திட்டத்தினை முழு கணினிமயமாக்கப்பட்டதன் மூலம் அத்தியாவசியப் பொருட்களின் ஒதுக்கீடு, நகர்வு மற்றும் விற்பனை ஆகியவை

கண்காணிக்கப்படுவதோடு, நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களின் இருப்பும் உறுதி செய்யப்படுகிறது. மேலும், பொது விநியோகத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு அளித்து வரும் சேவையினை எளிதில் பெறுவதற்கும் வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும் உள்ளது. நடைமுறையில் இருந்த பழைய காகித வடிவிலான குடும்ப அட்டைகள் முற்றிலுமாக மாற்றப்பட்டு மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

## 1.2 உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் முக்கிய செயல்பாடுகள்

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் முக்கிய பணிகளாவன :-

அ) பொது விநியோகத் திட்டம் குறித்த அரசின் கொள்கைகளை அமல்படுத்துதல்.

ஆ) மாநிலத்தில் பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்துதல் மற்றும் அதனை உன்னிப்பாக கண்காணித்தல்.

இ) அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம் 1955-ன் பிரிவுகளையும், அதன் கீழ் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளையும் நடைமுறைப்படுத்துதல்.

ஈ) நுகர்வோர் உரிமைகள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான சட்டக் கூறுகள் குறித்து மாநிலம் முழுவதும் பொதுமக்கள் மற்றும் மாணவர்களிடையே நுகர்வோர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஆகியவைகள் மூலம் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.

## 1.3 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பங்கு

மாநில பொது விநியோகத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படும் அத்தியாவசியப் பொருட்களான அரிசி, கோதுமை, சர்க்கரை, துவரம் பருப்பு மற்றும் பாமாயில் முதலானவற்றை கொள்முதல் செய்து, சேமித்து அவற்றை விநியோகம் செய்ய மாநில அரசின் பொதுத் துறை நிறுவனமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பணிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் அரிசி மற்றும் கோதுமையினை இந்திய உணவுக் கழகத்திலிருந்து நகர்வு செய்தும், சர்க்கரையினை

தமிழ்நாடு சர்க்கரை கூட்டமைப்பு மற்றும் தேவைக்கேற்ப வெளிச்சந்தையிலிருந்து கொள்முதல் செய்தும், துவரம் பருப்பினை மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான **NAFED**-மிருந்து கொள்முதல் செய்தும் மற்றும் பாமாயிலினை வெளிச்சந்தையிலிருந்து ஏல முறையில் கொள்முதல் செய்தும் வருகின்றது. இந்நிறுவனம் மேற்படி அத்தியாவசியப் பொருட்களை அதன் கிடங்குகளில் சேமித்து, அவைகளை மாதாந்திர ஒதுக்கீட்டிற்கு ஏற்ப நியாய விலைக் கடைகளுக்கு விநியோகித்து வருகின்றது.

### 1.4 நியாய விலைக் கடைகள்

நியாய விலைக் கடை அத்தியாவசியப் பொருட்களை சேமித்து குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யும் பொது விநியோகத் திட்ட அமைப்பின் அடிப்படை அலகாகும். பெருவாரியான நியாய விலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கூட்டுறவுத் துறையினாலும் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலான நியாய விலைக் கடைகள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினாலும் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், சில நியாய விலைக் கடைகள் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் இதர கூட்டுறவுச் சங்கங்களாலும் நடத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் தனியார் எவரும் நியாய விலைக் கடையினை நடத்த அனுமதிக்கப்படுவதில்லை.

மாநிலம் முழுவதும் அனைத்து நியாய விலைக் கடைகளிலும் குடும்ப அட்டைதாரர்களுக்கு மின்னணு குடும்ப அட்டைகளை பயன்படுத்தி விற்பனை முனைய இயந்திரங்கள் மூலமாக அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. நியாய விலைக் கடைகளின் அனைத்து வணிக பரிமாற்றங்களும் நிகழ் நேரத்தில் கண்காணிக்க விற்பனை முனைய இயந்திரங்கள் உதவியாக உள்ளன.

31.05.2019 நிலவரப்படி, மாநிலத்தில் செயல்பட்டு வரும் முழு நேர / பகுதி நேர நியாய

விலைக் கடைகளின் நிறுவனவாரியான எண்ணிக்கை விவரம் பின் வருமாறு :

| வ. எண். | நிறுவனம் | முழு நேரம் | பகுதி நேரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | கூட்டுறவுச் சங்கங்கள் (கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குபவை) | 23,473 | 9,458 | 32,931 |
| 2 | இதர கூட்டுறவுச் சங்கங்கள் | 314 | 162 | 476 |
| 3 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 1,178 | 277 | 1,455 |
| 4 | மகளிர் சுய உதவிக் குழுக்கள் நடத்தும் நியாய விலைக் கடைகள் | 373 | 44 | 417 |
| | மொத்தம் | **25,338** | **9,941** | **35,279** |

மக்கள் எளிதில் சென்று வர முடியாத பகுதிகள், மலைப் பகுதிகள் மற்றும் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படக்கூடிய பகுதிகளில் வாழும் மக்களுக்கு உதவும் வகையில், குடும்ப அட்டைதாரர்கள் சிரமமின்றி சென்று வர ஏதுவாக நியாய விலைக் கடைகள் திறக்க அரசு நடவடிக்கை மேற்கொள்கிறது. அதனால், குடும்ப அட்டைதாரர்கள் இருப்பிடத்திலிருந்து 1.5 கிலோ மீட்டருக்கு மேல் நடந்து சென்று பொருட்களை வாங்கும் நிலை தவிர்க்கப்படுகிறது. தேவைப்படும்

போது நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை தளர்த்தி புதிய நியாய விலைக் கடைகள் திறக்கவும் அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

### 1.5 மின்னணு குடும்ப அட்டைகள்

பொது விநியோகத் திட்டத்தினை முழு கணினிமயமாக்கலின் ஒரு பகுதியாக குடும்ப அட்டைதாரர்களுக்கு மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டது. 31.05.2019 நிலவரப்படி, மொத்தம் 1,99,53,681 மின்னணு குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளன.

#### 1.5.1 மின்னணு குடும்ப அட்டைகளின் வகைகள்

தமிழ்நாட்டில் குடும்ப அட்டைதாரர்களின் விருப்பம் மற்றும் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஐந்து வகையான குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன. அதன்படி, 31.05.2019-ன்படி புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை விபரம் பின்வருமாறு :

| வ. எண். | குடும்ப அட்டையின் வகை | தகுதியான அத்தியாவசியப் பொருட்கள் விவரம் | குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | முன்னுரிமை குடும்ப அட்டைகள் (PHH)* | அரிசி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் | 77,81,055 |
| 2 | முன்னுரிமை குடும்ப அட்டைகள் - அந்தியோதயா அன்னயோசனா (PHH-AAY) | 35 கிலோ அரிசி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் | 18,64,600 |
| 3 | முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் (NPHH)** | அரிசி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் | 92,49,207 |
| 4 | முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் – சர்க்கரை (NPHH-S) | சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைகள் (அரிசி தவிர பிற அத்தியாவசியப் பொருட்கள்) | 10,12,630 |
| 5 | முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் - எப்பொருளும் இல்லாதவை (NPHH-NC) | எப்பொருளும் இல்லாதவை | 46,189 |
| மொத்த மின்னணு குடும்ப அட்டைகள் | | | **1,99,53,681** |

*** மத்திய அரசின் ஒதுக்கீடு**

**** மாநில அரசின் நிதி ஆதாரம்**

### 1.5.2 அந்தியோதயா அன்னயோசனா திட்ட குடும்ப அட்டைகள்

மாநிலத்தில் வசித்து வரும் வறியவர்களில் வறிய குடும்பங்கள் கண்டறியப்பட்டு அந்தியோதயா அன்னயோசனா திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். அந்தியோதயா அன்னயோசனா திட்டப் பயனாளிகள் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பிற அத்தியாவசியப் பொருட்களோடு 35 கிலோ விலையில்லா அரிசி பெறத் தகுதியுடையவராவர். நம் மாநிலத்திற்கு இந்திய அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அந்தியோதயா அன்னயோசனா திட்டப் பயனாளிகளின் எண்ணிக்கை 18,64,600 ஆகும். இத்திட்டம் மாநிலத்தில் முழு உணவுப் பாதுகாப்பினை உறுதிபடுத்தியுள்ளது.

### 1.5.3 திருநங்கைகளுக்கான குடும்ப அட்டைகள்

மாநிலத்தில் வசித்து வரும் திருநங்கைகள் என அழைக்கப்படும் மூன்றாம் பாலினத்தினரை அங்கீகரித்து மாநில அரசு தனி நபர் அல்லது குழுவுக்கு குடும்ப அட்டைகள் வழங்கி வருகிறது. 31.05.2019

நிலவரப்படி, மாநிலத்தில் 2,293 குடும்ப அட்டைகள் திருநங்கைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுகின்றது.

### 1.5.4 காவல், சிறை மற்றும் வனத்துறை பணியாளர்களுக்கான குடும்ப அட்டைகள்

சீருடைப் பணியாளர்களின் நலன் கருதி, காவல், சிறை மற்றும் வனத்துறை பணியாளர்களுக்கு துவரம் பருப்பு, சர்க்கரை மற்றும் பாமாயில் ஆகியவை பொது விநியோகத் திட்ட விலையின் பாதி விலையில் முறையே ரூ.15.00, ரூ.12.50 மற்றும் ரூ.12.50-ம், இதர அத்தியாவசியப் பொருட்கள் வழக்கமான விலையிலும் நியாய விலைக் கடைகள் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன. மேற்படி மானியத்திற்கு தகுதியுடைய சீருடைப் பணியாளர்களின் துறை மற்றும் பயன் பெறும் அலுவலர்கள் பதவி விவரம் பின்வருமாறு :

| வ. எண். | துறையின் பெயர் | மானியத்திற்கு தகுதியுடைய அலுவலர்கள் நிலை |
|---|---|---|
| 1 | காவல் துறை | இரண்டாம் நிலை காவலர் முதல் காவல் ஆய்வாளர் வரை |
| 2 | வனத் துறை | வனக்காவலர் முதல் வனச் சரகர் வரை |
| 3 | சிறைத் துறை | இரண்டாம் நிலை காவலர் முதல் துணை சிறைக் காவலர் வரை |

சீருடைப் பணியாளர்களுக்கு முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் **(Non Priority House Hold - NPHH)** வழங்கப்பட்டு நியாய விலைக் கடைகளில் உள்ள விற்பனை முனைய இயந்திரங்களில் தனி அடையாளத்திற்காக 'காவலர் அட்டை' எனக் குறிக்கப்பட்டுள்ளது. 31.05.2019 நிலவரப்படி, இந்த வகையின் கீழ் 57,380 சீருடைப் பணியாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

### 1.5.5 பொது விநியோகத் திட்டத்தின் கீழ் முதியோர் உதவித் தொகை பெறுவோருக்கு அரிசி வழங்குதல்

1,99,53,681 மின்னணு குடும்ப அட்டைகளைத் தவிர, மாநிலத்தில் வசித்து வரும் 4,30,465 முதியோர்

உதவித் தொகை பெறுவோருக்கு அரசால் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மாதமொன்றிற்கு 5 கிலோ விலையில்லா அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

### 1.5.6 போலி குடும்ப அட்டைகளை நீக்குதல்

01.04.2017 முதல் அத்தியாவசியப் பொருட்கள் மின்னணு குடும்ப அட்டைகள் மூலம் மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. முழு கணினிமயமாக்கல் மற்றும் பயனாளிகளின் தகவல் தொகுப்பில் ஆதார் எண் உள்ளீடு செய்தல் ஆகியவை போலி குடும்ப அட்டைகளை நீக்குவதற்கும், அதிகபட்ச மானியத்திற்குட்பட்ட விலையில் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு மட்டுமே விநியோகம் செய்வதையும் உறுதி செய்துள்ளது.

## 1.6 பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்களின் வழங்கல் அளவு

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி, கோதுமை, சர்க்கரை,

மண்ணெண்ணெய், துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகிய அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பொருட்களின் வழங்கல் அளவு மற்றும் அவற்றின் விற்பனை விலை விபரம் பின்வருமாறு :-

| வ. எண். | பொருட்களின் பெயர் | மாதாந்திர வழங்கல் அளவு | விற்பனை விலை |
|---|---|---|---|
| 1 | அரிசி | அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டை-தாரர்களுக்கு ஒவ்வொரு நபருக்கும் (குழந்தை உட்பட) தலா 5 கிலோ வீதம் (தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் அமல்படுத்துவதற்கு முன்) ஏற்கனவே வழங்கப்பட்ட அரிசியின் அளவில் எது அதிகமோ அது வழங்கப்பட்டு வருகிறது. அனைத்து அந்தியோதயா அன்னயோசனா குடும்ப அட்டைகளுக்கு தலா 35 கிலோ அரிசி வழங்கப்படுகிறது. | விலையின்றி வழங்கப்பட்டு வருகிறது. |

| வ. எண். | பொருட்களின் பெயர் | மாதாந்திர வழங்கல் அளவு | விற்பனை விலை |
|---|---|---|---|
| 2 | கோதுமை | சென்னை மற்றும் மாவட்ட தலைநகரங்களில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு குடும்ப அட்டைக்கு அரிசியின் அளவில் அரிசிக்கு பதிலாக 10 கிலோ கோதுமை, இதர பகுதிகளில் 5 கிலோ கோதுமை, இருப்பின் அளவைப் பொறுத்து வழங்கப்படுகிறது. | விலையின்றி வழங்கப்பட்டு வருகிறது |
| 3 | சர்க்கரை | மாதம் ஒன்றிற்கு ஒரு நபருக்கு 500 கிராம் வீதம் அதிகபட்ச அளவு 2 கிலோவும், சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு நபருக்கு மாதமொன்றுக்கு 500 கிராம் வீதமும், கூடுதலாக மாதமொன்றிற்கு 3 கிலோ சர்க்கரையும், அதிகபட்சமாக 5 கிலோ சர்க்கரையும் வழங்கப்படுகிறது. | அந்தியோதயா அன்னயோசனா திட்டத்தின் (AAY) கீழ் உள்ள குடும்ப அட்டைகளுக்கு கிலோ ஒன்றிற்கு ரூ.13.50 மற்றும் இதர குடும்ப அட்டைகளுக்கு ரூ.25/- |

| வ. எண். | பொருட்களின் பெயர் | மாதாந்திர வழங்கல் அளவு | விற்பனை விலை |
|---|---|---|---|
| 4 | மண்ணெண்ணெய் | குடும்ப அட்டைதாரர்களின் இருப்பிடம் மற்றும் பெற்றுள்ள எரிவாயு இணைப்பின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில், குடும்ப அட்டைகளுக்கு மாதம் ஒன்றிற்கு 3 லிட்டர் முதல் 15 லிட்டர் வரை | லிட்டர் ஒன்றிற்கு ரூ.13.60 முதல் ரூ.14.20 வரை |
| 5 | துவரம் பருப்பு | குடும்ப அட்டை ஒன்றிற்கு 1 கிலோ | ஒரு கிலோ ரூ.30/- |
| 6 | பாமாயில் | குடும்ப அட்டை ஒன்றிற்கு 1 லிட்டர் பாக்கெட் | ஒரு லிட்டர் ரூ.25/- |

### 1.6.1 அரிசி

அரிசி, தமிழ்நாட்டு மக்களின் பிரதான உணவாக திகழ்கிறது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி விநியோகம் செய்ய ஏதுவாக மத்திய தொகுப்பு ஒதுக்கீடு, இந்திய உணவுக் கழகம் மூலமாக பெறப்படுகிறது. தற்போதைய மாதாந்திர அரிசி

ஒதுக்கீடு மற்றும் அதற்கான இந்திய உணவுக் கழக விற்பனை விலை விவரம் பின் வருமாறு :

| வ. எண். | வகை | மாத ஒதுக்கீடு (மெ.டன்னில்) | இந்திய உணவுக் கழக விற்பனை விலை (கிலோ ஒன்றிற்கு) |
|---|---|---|---|
| 1 | அந்தியோதயா அன்னயோ சனா (AAY) | 57,437 | ரூ. 3.00 |
| 2 | முன்னுரிமை குடும்பங்கள் (Priority House Holds) | 1,35,784 | ரூ. 3.00 |
| 3 | ஈடுசெய் ஒதுக்கீடு (Tide Over) | 99,773 | ரூ. 8.30 |
| | மொத்தம் | 2,92,994 | |

சராசரி மாதாந்திர அரிசி நுகர்வு 3.13 லட்சம் மெட்ரிக் டன்.

### 1.6.2 சர்க்கரை

மத்திய அரசு ஜூன் 2013 முதல் லெவி சர்க்கரை ஒதுக்கீடு முறையினை நீக்கி விட்டு, நியாய விலைக் கடைகளில் பொது விநியோகத் திட்ட சர்க்கரையினை கிலோ ஒன்றிற்கு ரூ.13.50 எனத் தொடர்ந்து விற்பனை செய்து வரும் மாநிலங்களுக்கு பொது விநியோகத் திட்ட சர்க்கரை ஒதுக்கீடுகளுக்கு கிலோ

ஒன்றிற்கு ரூ.18.50 மானியம் வழங்க உறுதியளித்து, பொது விநியோகத் திட்டத்திற்கான சர்க்கரையினை கொள்முதல் செய்ய மாற்று ஏற்பாடு செய்துகொள்ளுமாறு மாநில அரசினை அறிவுறுத்தியது. மாதம் ஒன்றிற்கு 10,820 மெ.டன் சர்க்கரைக்கு வழங்கப்பட்டு வந்த மானியம் குறைக்கப்பட்டு, அந்தியோதயா அன்னயோசனா (AAY) குடும்பங்களுக்கு மட்டும் 1,864 மெ.டன்னுக்கான மானியத்தினை இந்திய அரசு வழங்கி வருவதன் விளைவாக, மாநிலத்தின் மானிய சுமை அதிகரித்துள்ளது. இதனால், 01.11.2017 முதல் மாநில அரசு சர்க்கரை விலையினை மாற்றம் செய்து அந்தியோதயா அன்னயோசனா (AAY) அல்லாத இதர குடும்ப அட்டைகளுக்கு கிலோ ஒன்றிற்கு ரூ. 25/- என்ற விலையில் வழங்கி வருகிறது.

### 1.6.3 கோதுமை

உணவு தானியங்களில், அரிசிக்கு அடுத்த நிலையில் பல்வேறு உணவு வகைகளை தயார் செய்ய இம்மாநில மக்களால் கோதுமை நுகர்வு செய்யப்பட்டு

வருகிறது. மத்திய அரசு இம்மாநிலத்திற்கு மாதந்தோறும் 13,485 மெட்ரிக் டன் கோதுமை துக்கீடு செய்து வருகிறது. 02.02.2017 முதல் குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசிக்கு பதிலாக கோதுமை விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. சென்னை மற்றும் மாவட்டத் தலைநகர்களில் குடும்ப அட்டைதாரரின் விருப்பத்தின் அடிப்படையில் 10 கிலோ வீதமும், ஏனைய பகுதிகளில் 5 கிலோ வீதமும் நியாய விலைக் கடைகளில் இருப்பின் அளவினைப் பொறுத்து அரிசிக்கு பதிலாக கோதுமை விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

### 1.7 மண்ணெண்ணெய்

#### 1.7.1 மண்ணெண்ணெய் ஒதுக்கீடு

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மண்ணெண்ணெய் விநியோகம் செய்ய மத்திய அரசு நம்மாநிலத்திற்கு காலாண்டு அடிப்படையில் ஒதுக்கீடு செய்து வருகிறது. மாநிலத்தின் மாதாந்திர மண்ணெண்ணெய் தேவை 43,940 கி.லி. ஆகும். மத்திய அரசு ஒதுக்கீடு செய்து வந்த

மண்ணெண்ணெயினைப் படிப்படியாக குறைத்து நம்மாநிலத்திற்கு அக்டோபர் 2017 முதல் 16,148 கி.லி. மண்ணெண்ணெய் வழங்கி வருவதால், மாநிலத்தின் முழுத் தேவையில் 37 சதவிகிதம் மட்டுமே பூர்த்தியாகிறது. மாநிலத்தின் முழுத் தேவைக்கு மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்ய மாநில அரசு மத்திய அரசினை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. மத்திய அரசு 01.07.2016 முதல் மண்ணெண்ணெய்க்கான கிடங்கு முன் இருப்பு விலையினை இதர காரணிகளை உள்ளடக்கி லிட்டர் ஒன்றிற்கு ரூ.8.62 (31.05.2019-ல் இருந்து ரூ.14.62 ஆக உயர்வு) என்று இதுவரை இல்லாத அளவில் உயர்த்தியதற்கு மாநில அரசு எதிர்ப்பு தெரிவித்ததுடன், இவ்விலை உயர்வினை முழுவதுமாக திரும்பப் பெற மத்திய அரசினை தொடர்ந்து கோரி வருகிறது. குடும்ப அட்டைதாரர்களின் வசிப்பிடத்திற்கேற்ப மாநிலத்தில் லிட்டர் ஒன்றிற்கு ரூ.13.60 முதல் ரூ.14.20 வரை என்ற விலையில் மண்ணெண்ணெய் சில்லறை விற்பனை விலை 01.08.2011 முதல் நிர்ணயம் செய்யப்பட்டு நடைமுறையில் உள்ளது.

### 1.7.2 மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைத்தல்

மாதம் முழுவதும் குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்திடும் வகையில், மாநிலத்தில் மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்கப்பட்டன. ஒரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் 5,000 முதல் 15,000 வரையிலான குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்து வருகிறது. தற்போது மாநிலம் முழுவதும் கூட்டுறவுத் துறையின் கீழ் 255 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் 35 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களும் ஆக மொத்தம் 290 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் இயங்கி வருகின்றன. அனைத்து மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களுக்கும் விற்பனை முனைய இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 1.8 சிறப்புப் பொது விநியோகத் திட்டம்

வெளிச்சந்தையில் ஏற்படும் விலை ஏற்றத்திலிருந்து துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவற்றின் விலைகளை கட்டுக்குள் வைத்திருக்கும் பொருட்டு, அரசு அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் விநியோகம் செய்து வருகிறது. 20,000 மெட்ரிக் டன் துவரம் பருப்பு மற்றும் 1,50,00,000 லிட்டர் (பாக்கெட்டுகள்) பாமாயில் ஆகியவை மாதந்தோறும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் துவரம் பருப்பு / கனடா மஞ்சள் பருப்பு மற்றும் பாமாயில் விநியோகத்தினை பிப்ரவரி 2020 வரை அரசு நீட்டித்துள்ளது.

### 1.9 ரமலான் மாதத்தில் இஸ்லாமியர்களுக்கு அரிசி வழங்குதல்

ரமலான் மாதத்தின் போது நோன்பு கஞ்சி தயாரிப்பதற்கு பள்ளிவாசல்களுக்கு அரசு ஆண்டுதோறும் சிறப்பு ஒதுக்கீட்டின் கீழ் பச்சரிசி

வழங்கி வருகிறது. 2019-ம் ஆண்டு 5,450.384 மெட்ரிக் டன் பச்சரிசி கிலோ ரூ.1/- என்ற விலையில் 2,895 பள்ளிவாசல்களுக்கு ரமலான் நோன்பிற்காக மாநிலம் முழுவதும் வழங்கப்பட்டது. இதற்காக மாநில அரசு ரூ.54,50,384/- செலவு செய்துள்ளது.

## 1.10 பொங்கல் பண்டிகை கொண்டாட பொங்கல் பரிசு தொகுப்பு விநியோகம்

2019-ம் ஆண்டு பொங்கல் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்ற நோக்கத்தில், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்கள் (எப்பொருளும் இல்லாத அட்டைகள் தவிர) மற்றும் முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, இரண்டு அடி நீள கரும்புத் துண்டு, ஆகியவற்றுடன் தலா 20 கிராம் முந்திரி, உலர் திராட்சை மற்றும் 5 கிராம் ஏலக்காய் அடங்கிய ஒரு சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பும் மற்றும் ரொக்கம் ரூ.1,000/- மும் நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்பட்டன. இதற்காக மாநில அரசு ரூ.2,246.60 கோடி செலவு செய்துள்ளது.

## 1.11 தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் – 2013 நடைமுறைப்படுத்துதல்

மாநிலத்தில் செயல்படுத்தி வரும் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் தன்மை மாறாமல், மாநில அரசு தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-ஐ 01.11.2016 முதல் அமல்படுத்தி வருகிறது. இச்சட்டத்தின்படி நபர் ஒருவருக்கு மாதந்தோறும் 5 கிலோ அரிசி என்ற அளவில் முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். எனினும், இச்சட்டத்தினை செயல்படுத்தும் போது அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் ஏற்கனவே பெற்று வந்த அரிசியின் அளவு அல்லது நபர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு 5 கிலோ அரிசி என்ற அளவு இவற்றில் எது அதிகமோ அந்த அளவில் அரிசியினை விலையின்றி பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி நகரப் பகுதியில் 37.79% மற்றும் கிராமப் பகுதியில் 62.55% என்ற மத்திய அரசின் விழுக்காட்டினை கணக்கில் கொண்டு முன்னுரிமை குடும்பங்கள்

கண்டறியப்பட்டுள்ளன. அதன் விவரம் **www.tnpds.gov.in** என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

சிறப்பு உதவிகள் தேவைப்படும் முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் மூலம் சம்பந்தப்பட்ட நியாய விலைக் கடைகளில் தங்களுக்குரிய அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக் கொள்ள சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் ஒவ்வொருவருக்கும் உணவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

**1.11.1 கண்காணிப்புக் குழுக்கள்**

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-ல் வகை செய்துள்ளவாறு, பொது விநியோகத் திட்டத்தின் பயன்கள் உரிய நபர்களுக்கு சென்றடைவதை உறுதி செய்திட, மாநில/ மாவட்டம் / வட்டம் மற்றும் நியாய விலைக் கடை அளவில் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநில/ மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் காலாண்டிற்கு குறைந்தது

ஒரு முறையேனும், வட்டம்/ மண்டலம் மற்றும் நியாய விலைக் கடை அளவிலான குழுக்கள் மாதத்திற்கு ஒரு முறையேனும் கூட்டப்பட வேண்டும்.

### 1.11.2 குறை தீர் அமைப்பு

அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் தொடர்பாக பொது மக்கள் தெரிவிக்கும் எவ்வித குறைகளையும் தீர்வு செய்யும் பொருட்டு, மாவட்ட வருவாய் அலுவலர்கள் மாவட்ட குறைதீர் அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். சென்னை மாநகரை பொறுத்த வரையில், துணை ஆணையர் வடக்கு/தெற்கு ஆகியோர் மாவட்ட குறைதீர் அலுவலர்களாக செயல்பட்டு வருகிறார்கள். குறைதீர் அலுவலர்களின் தொடர்பு விவரங்கள், பொது விநியோகத் திட்ட வலைத்தளம் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. குடும்ப அட்டைதாரர்களின் குறைகளை உடனுக்குடன் தீர்க்கும் வகையில் வலுவான குறைதீர்க்கும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் ஒரு அங்கமாக குடும்ப அட்டைதாரர்கள் கட்டணமில்லா தொலைபேசி எண்

1967 மற்றும் 1800 425 5901 ஆகியவற்றில் தொடர்பு கொள்ளவும் மற்றும் ஆன்லைன் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

### 1.11.3 மாநில உணவு ஆணையம்

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-ன் படி மாநில உணவு ஆணையம் அமைக்கப்பட்டு, ஒரு தலைவர் மற்றும் ஐந்து உறுப்பினர்கள் கொண்ட ஒரு சட்டமுறை அமைப்பாக 28.02.2018 முதல் இயங்கி வருகிறது. இவ்வாணையம் மாவட்ட குறைதீர் அலுவலர் ஆணை மீதான ஒரு மேல்முறையீட்டு அமைப்பாக செயல்பட்டு வருகிறது. மாநிலத்தில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் செயல்படுவது குறித்த ஆலோசனை மேற்கொள்ள உணவு ஆணையம் சீரான இடைவெளியில் கூடுகிறது.

## 1.12 பொது விநியோகத் திட்டத்தினை கணினிமயமாக்கல் மற்றும் மின்னணு குடும்ப அட்டை வழங்குதல்

பொது விநியோகத் திட்டத்தினை நவீனப்படுத்தவும், அத்தியாவசியப் பொருட்கள் கடத்தப்படுவதை தடுக்கவும் தமிழ்நாடு அரசு மாநிலம் முழுவதும் பொது விநியோகத் திட்டத்தினை முழு கணினிமயமாக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. இதன் மூலம் குடும்ப அட்டைகள் / பயனாளிகள் தகவல் தொகுப்பினை எண்ணியலாக்கம் செய்தல், தொடர் விநியோகத்தினை கணினி மூலம் மேலாண்மை செய்தல், வெளிப்படைத்தன்மை கொண்ட இணையதளத்தினை உருவாக்குதல் மற்றும் திறன்மிகு குறைதீர் அமைப்பினை ஏற்படுத்துதல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளன. குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிப்பதற்கு ஏதுவாக அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் விற்பனை முனைய இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொது விநியோகத் திட்டத்தினை முழுமையாக கணினிமயமாக்கியதன் மூலமாக பொது விநியோகத் திட்டத்திற்கான அத்தியாவசியப் பொருட்களின் ஒதுக்கீட்டினை இணையவழி மூலம் மேற்கொள்ளுதல், கிடங்குகள் மற்றும் நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களின் நகர்வினை நிகழ் நேரத்தில் கண்காணித்தல், குடும்ப அட்டைதாரர்களுக்குரிய அத்தியாவசியப் பொருட்களின் உரிம அளவு சரியான முறையில் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொது மக்கள் இணையம் மூலமாக புதிய குடும்ப அட்டைகள் பெற விண்ணப்பம் செய்வதற்கும், குடும்ப அட்டைகளில் விவர மாற்றம் மேற்கொள்வதற்கும், மின்னணு குடும்ப அட்டை தொடர்பான விண்ணப்பங்களின் நிலை பற்றி அறிந்து கொள்வதற்கும், மேலும் பல விவரங்களை அறிந்து கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. குடும்ப அட்டைதாரர்கள் தங்களுடைய குடும்ப அட்டை இணைக்கப்பட்டுள்ள நியாய விலைக் கடையில் உள்ள அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு விவரங்களை தெரிந்து கொள்ளவும் முழு கணினிமயமாக்கல் வகை

செய்கிறது. ஆதார் எண் இணைக்கப்பட்ட குடும்பங்களுக்கு 01.04.2017 முதல் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் அவர் பதிவு செய்துள்ள கைபேசிக்கு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கப்பட்ட விவரம் குறுஞ்செய்தி வாயிலாக அனுப்பப்படுவதால் இணைய வழி கண்காணிப்பு முறையானது முறைகேடாக ரசீது இடுவதைத் தவிர்க்க உதவுகிறது.

### 1.13 உணவு மானியம்

அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் கொள்முதல் செய்யப்பட்டு பொது விநியோகத் திட்டம் மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அதிக மானியத்திற்குட்பட்ட விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைத்தரார்களுக்கு அரிசி மற்றும் கோதுமை விலையின்றி விநியோகிக்கப்பட்டு வருகிறது. 2019-2020-ம் நிதியாண்டிற்கு ரூ.6,000 கோடி உணவு மானியமாக அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# இயல் -2

## நுகர்வோர் பாதுகாப்பு

### 2.1 முன்னுரை

தமிழ்நாடு அரசு நுகர்வோர் உரிமைகள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு குறித்து மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்திட அதிக முன்னுரிமை அளித்து வருகிறது.

நுகர்வோருக்கு சேவை / பொருட்கள் தரத்தில் சமரசமின்றி உரிய விலையில் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்வது நுகர்வோர் பாதுகாப்பின் முக்கிய நோக்கமாகும்.

நுகர்வோர் உரிமை, பொறுப்புகள் மற்றும் குறைதீர் முறைகள் குறித்து கற்பிப்பதன் மூலம் அனைத்து மக்களுக்கும் நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் நலன் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு பெரு முயற்சி எடுத்து வருகிறது. நுகர்வோர் குறைகளை விரைந்து தீர்வு காண்பதை உறுதி செய்திட

நுகர்வோருக்கான நீதிமுறை சார்புடைய மன்றங்களை பல்வேறு நிலைகளில் அரசு நிறுவியுள்ளது,

## 2.2 நுகர்வோர் குறைகளுக்கான சட்டப்படியான தீர்வுகள்

1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தேசிய, மாநில மற்றும் மாவட்ட நிலைகளில் கீழ்க்கண்ட நீதிமுறைச் சார்புடைய 3 அடுக்கு குறைதீர் மன்றங்கள் தோற்றுவிக்கப் பட்டுள்ளன :-

1. தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்
2. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும்
3. மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம்

### 2.2.1 தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் அனைத்து மாநிலங்களிலும் உள்ள நுகர்வோர் குறைதீர் ஆணையங்களுக்கு மேல்முறையீட்டு ஆணையமாக புது தில்லியில் செயல்படுகிறது. இவ்வாணையத்தில்,

ரூபாய் ஒரு கோடிக்கு மேல் மதிப்புள்ள நிவாரணங்களுக்கு நுகர்வோர் நேரடியாக வழக்கு தொடரலாம், அனைத்து மாநில ஆணையங்களில் முடிவுற்ற வழக்குகளின் தீர்ப்புகளின் மேல் எழும் மேல்முறையீடுகளுக்குத் தீர்ப்பளிக்கும் அதிகாரம் மற்றும் மாநில ஆணையங்களின் ஆணைகளைச் சீராய்வு செய்யும் அதிகாரம் ஆகியவை இவ்வாணையத்திற்கு உண்டு.

### 2.2.2 மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்

ரூபாய் இருபது இலட்சத்திற்கு மேல் ரூபாய் ஒரு கோடி வரை நிவாரணம் கோரும் நுகர்வோர் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் முறையிடலாம். இவ்வாணையம் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியை தலைவராகவும், இரண்டு நீதிசார் உறுப்பினர்களும் மற்றும் இரண்டு நீதி சாரா உறுப்பினர்களும் அவற்றில் ஒரு பெண் உறுப்பினரையும் கொண்ட அமைப்பாகும். மாநில ஆணையம் மற்றும் 32 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் நிர்வாகத்தை கவனிக்க துறைத்

தலைவராக செயல்பட பதிவாளர் உள்ளார். 13 தென் மாவட்ட நுகர்வோர்களின் நலன் கருதி, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் கிளையானது மதுரையில் 11.8.2012 முதல் உயர்நீதிமன்ற மதுரை கிளையைப் போன்று செயல்பட்டு வருகிறது.

மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை மற்றும் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் மதுரை சுற்றுக் கிளை ஆகியவை அந்தந்த மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களின் தீர்ப்புகளின் மேல் எழும் மேல்முறையீடு மற்றும் சீராய்வு மனுக்களை தீர்வு செய்யும் அதிகாரம் கொண்டதாகும். மாநில ஆணையம் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து மே-2019 வரை 29,787 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அதில் 25,538 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன. அதன் சதவீதம் 85.73% ஆகும். ஜனவரி 2018 முதல் மே 2019 வரையிலான காலத்தில் மாநில நுகர்வோர் ஆணையம், சென்னை மற்றும் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் மதுரை சுற்றுக் கிளை ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் மற்றும்

முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. :-

| மாதங்கள் (2018 -2019) | மேல்முறையீட்டு மனுக்கள் | | | | | நுகர்வோர் வழக்குகள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மாதத்தின் துவக்கத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் | இம்மாதத்தில் பதிவான வழக்குகள் | மொத்தம் | முடிவு செய்யப்பட்ட வழக்குகள் | மாத இறுதியில் நிலுவையிலுள்ள வழக்குகள் | மாதத்தின் துவக்கத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் | இம்மாதத்தில் பதிவான வழக்குகள் | மொத்தம் | முடிவு செய்யப்பட்ட வழக்குகள் | மாத இறுதி நிலுவையிலுள்ள வழக்குகள் |
| ஜனவரி-18 | 2139 | 21 | 2160 | 13 | 2147 | 1643 | 17 | 1660 | 12 | 1648 |
| பிப்ரவரி-18 | 2147 | 27 | 2174 | 30 | 2144 | 1648 | 28 | 1676 | 6 | 1670 |
| மார்ச்-18 | 2144 | 51 | 2195 | 26 | 2169 | 1670 | 23 | 1693 | 10 | 1683 |
| ஏப்ரல்- 18 | 2169 | 57 | 2226 | 21 | 2205 | 1683 | 18 | 1701 | 13 | 1688 |
| மே -18 | 2205 | 15 | 2220 | 4 | 2216 | 1688 | 11 | 1699 | 1 | 1698 |
| சூன்-18 | 2216 | 47 | 2263 | 14 | 2249 | 1698 | 16 | 1714 | 4 | 1710 |
| சூலை-18 | 2249 | 37 | 2286 | 37 | 2249 | 1710 | 32 | 1742 | 8 | 1734 |
| ஆகஸ்டு-18 | 2249 | 68 | 2317 | 23 | 2294 | 1734 | 37 | 1771 | 8 | 1763 |
| செப்டம்பர்-18 | 2294 | 45 | 2339 | 70 | 2269 | 1763 | 25 | 1788 | 13 | 1775 |
| அக்டோபர்-18 | 2269 | 42 | 2311 | 37 | 2274 | 1775 | 12 | 1787 | 11 | 1776 |
| நவம்பர் -18 | 2274 | 40 | 2314 | 41 | 2273 | 1776 | 18 | 1794 | 14 | 1780 |
| டிசம்பர்-18 | 2273 | 39 | 2312 | 20 | 2292 | 1780 | 16 | 1796 | 3 | 1793 |
| ஜனவரி-19 | 2292 | 15 | 2307 | 45 | 2262 | 1793 | 16 | 1809 | 10 | 1799 |
| பிப்ரவரி-19 | 2262 | 43 | 2305 | 38 | 2267 | 1799 | 27 | 1826 | 10 | 1816 |
| மார்ச்-19 | 2267 | 58 | 2325 | 29 | 2296 | 1816 | 13 | 1829 | 12 | 1817 |
| ஏப்ரல்-19 | 2296 | 63 | 2359 | 41 | 2318 | 1817 | 18 | 1835 | 9 | 1826 |
| மே-19 | 2318 | 15 | 2333 | 1 | 2332 | 1826 | 9 | 1835 | 1 | 1834 |

### 2.2.3 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள்

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன்படி, ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் இருக்க வேண்டும். 32 வட்டங்களில், நீதிமுறை சாரா மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் நுகர்வோர், ரூபாய் இருபது இலட்சம் வரையிலான நிவாரணங்களுக்கு வழக்குகள் தொடரலாம். மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றமானது ஓய்வு பெற்ற ஒரு மாவட்ட நீதிபதியை தலைவராகவும் மற்றும் இரண்டு உறுப்பினர்களை கொண்ட அமைப்பாகும். அவற்றுள் ஒருவர் பெண் உறுப்பினர். மாவட்ட மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து மார்ச்-**2019** வரை 1,21,655 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அதில் 1,12,608 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன. அதன் சதவீதம் 92.56% ஆகும். ஜனவரி 2018 முதல் மே 2019 வரையிலான காலத்தில் மாநில நுகர்வோர் ஆணையம், சென்னை மற்றும் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் மதுரை சுற்றுக் கிளை ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்ட

**வழக்குகள் மற்றும் முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. :-**

| மாதங்கள் | மாதத்தின் துவக்கத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் | இம்மாதத்தில் பதிவான வழக்குகள் | மொத்தம் | முடிவு செய்யப் பட்ட வழக்குகள் | நிலுவையில் உள்ள வழக்குகள் |
|---|---|---|---|---|---|
| ஜனவரி-18 | 9258 | 234 | 9492 | 242 | 9250 |
| பிப்ரவரி-18 | 9250 | 236 | 9486 | 269 | 9217 |
| மார்ச்-18 | 9217 | 198 | 9415 | 270 | 9145 |
| ஏப்ரல்-'18 | 9145 | 333 | 9478 | 345 | 9133 |
| மே-18 | 9133 | 284 | 9417 | 274 | 9143 |
| சூன்- 18 | 9143 | 175 | 9318 | 289 | 9029 |
| சூலை- 18 | 9029 | 260 | 9289 | 302 | 8987 |
| ஆகஸ்டு- 18 | 8987 | 252 | 9239 | 257 | 8982 |
| ஆகஸ்டு-18 | 8982 | 248 | 9230 | 282 | 8948 |
| செப்டம்பர்-18 | 8948 | 706 | 9654 | 551 | 9103 |
| அக்டோபர்18 | 9103 | 194 | 9297 | 212 | 9085 |
| நவம்பர் -18 | 9085 | 241 | 9326 | 206 | 9120 |
| டிசம்பர்-18 | 9120 | 227 | 9347 | 269 | 9078 |
| ஜனவரி-19 | 9078 | 246 | 9324 | 284 | 9040 |
| பிப்ரவரி-19 | 9040 | 249 | 9289 | 242 | 9047 |
| மார்ச்-19 | 9047 | 271 | 9318 | 260 | 9058 |
| ஏப்ரல்-19 | 9058 | 221 | 9279 | 237 | 9042 |

**2.3 சமரச மையம்**

நுகர்வோர்களின் நன்மைகளைக் கருதி மாற்று முறை தீர்வுக்காக சமரச மையம் மாநில ஆணையத்தில் செயல்பட்டு வருகிறது. இத்தீர்வு மையமானது கட்டணம் ஏதுமின்றி பயிற்றுவிக்கப்பட்ட, நடுநிலையான மூன்றாம் நபர், நடுநிலையாளர், பேச்சுவார்த்தை மூலம் வாதி, பிரதிவாதி இருவருக்கும் இடையே தீர்வு காணும் வகையில் முன்னோடி திட்டமாக துவக்கப்பட்டு, **15.12.2011** முதல் செயல்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டத்தை மாநில அரசே ஏற்று நடத்தி வருகிறது.

2.4 **எதிர்கால செயல் திட்டம்**

தற்போது 12 மாவட்ட குறைதீர் மன்றங்கள் சொந்த கட்டிடத்தில் இயங்கி வருகின்றன. மேலும் 21 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களுக்கு சொந்தக் கட்டிடம் கட்டுவதற்காக இலவசமாக காலி இடம் பெறுவதற்காக அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் முதன்மை மாவட்ட நீதிபதிகளை அணுகி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

எதிர்காலத்தில் அனைத்து மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களும் சொந்த கட்டிடத்தில் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 2.5 தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் ஆற்றலூட்டும் அதிகார சங்கம் (டான்ஸ்கோப்)

நுகர்வோர் நலன் சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளை மாநிலம் முழுவதும் மேற்கொள்ளும் பொருட்டு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரை தலைவராகவும், அரசு மற்றும் அரசு சாராத் துறையில் உள்ளவர்களை உறுப்பினர்களாகக் கொண்டும் "தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் ஆற்றலூட்டும் அதிகார சங்கம்" எனும் ஒரு மாநில அளவிலான அமைப்பினை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இச்சங்கம் மாநில நுகர்வோர் உதவி மையத்தினை செயல்படுத்துதல்,"தமிழ்நாடு நுகர்வோர் கவசம்" என்ற மாத இதழை வெளியிடுதல் மற்றும் நுகர்வோர் நலன் குறித்த பயிற்சி, கருத்தரங்குகள் நடத்துதல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

## 2.6 மாநில நுகர்வோர் சேவை மையம்

நுகர்வோர்களுக்கு ஒரு மாற்று குறைதீர் அமைப்பாக உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அலுவலகத்தில் மாநில நுகர்வோர் சேவை மையம் செயல்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்ட நுகர்வோர் எவரும் மாநில உதவி மையத்தினை தொடர்பு கொண்டு புகாரினை பதிவு செய்யலாம். நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் குறித்த இனங்களுக்கு தெளிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்குவதன் மூலம் குறைகளை தீர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

சேவை மையத்தின் தொடர்பு விவரம் கீழ் வருமாறு :

| | |
|---|---|
| **தொலைபேசி எண்** | **044 – 28592828** |
| **மின்னஞ்சல் முகவரி** | **consumer@tn.gov.in**<br>**schtamilnadu@gmail.com** |
| **ஆன்லைன் பதிவுச் சேவை** | **www.consumer.tn.gov.in** |
| **குறுஞ்செய்தி அனுப்ப வேண்டிய செல்பேசி எண்** | **8680018002**<br>**8680028003** |

## 2.7 தமிழ்நாடு நுகர்வோர் கவசம் – நுகர்வோர் விழிப்புணர்வு குறித்த மாதாந்திர இதழ்

பொது மக்களிடையே நுகர்வோர் விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வகையில் "தமிழ்நாடு நுகர்வோர் கவசம்" என்ற மாதாந்திர இதழினை உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை வெளியிடுகிறது. இவ்விதழ் இந்திய செய்தித்தாள்களின் பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு இதழ் ரூ.10/- என்ற விலையில், மாநிலத்தில் உள்ள பொது மக்கள், அரசு அலுவலகங்கள், தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் மற்றும் பொது நூலகங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. தற்போது, இவ்விதழ் 8,500 சந்தாதாரர்களைக் கொண்டுள்ளது.

## இயல் – 3

## விலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள்

### 3.1 முன்னுரை

வெளிச் சந்தையில் உணவுப் பொருட்கள் கிடைப்பதையும் மற்றும் அதன் விலைகளை கண்காணித்திடும் பொருட்டும் உணவுப் பொருள் வழங்கல் ஆணையரகத்தில் "விலை கண்காணிப்புக் குழு" இயங்கி வருகிறது. இப்பிரிவு அரிசி, கோதுமை, பருப்பு, சர்க்கரை, எண்ணெய் வகைகள் மற்றும் காய்கறிகள் உள்ளிட்ட 23 தேர்வு செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் வெளிச் சந்தையில் நிலவி வரும் சில்லறை மற்றும் மொத்த விலைகளை கண்காணித்து வருகிறது. சந்தை விலை நிலவரத்தினை ஆய்வு செய்து, உணவுப் பொருட்களின் விலையில் வித்தியாசம் ஏற்படும் போது, அதனை அரசுக்கு முன்கூட்டியே தெரிவித்து தடுப்பு நடவடிக்கைகளை குறித்த நேரத்தில் மேற்கொள்ள விலை கண்காணிப்புக் குழு உதவுகிறது. கடந்த ஆண்டுகளில் குறிப்பாக வெங்காயம், பருப்பு மற்றும்

சில உணவுப் பொருட்களின் விலை உயர்வின் போது உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்ததால், ஏழை மற்றும் சமூகத்தில் கீழ்தட்டு மக்களை உணவு பொருட்களின் விலை உயர்விலிருந்து அரசு பாதுகாத்துள்ளது.

## 3.2 தமிழ்நாடு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள்

- மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் அரசினால் அமைக்கப்பட்ட ”விலை கண்காணிப்புக் குழு” ஒன்று வெளிச்சந்தையில் நிலவும் அத்தியாவசியப் பொருட்களின் விலை மாற்றத்தை கண்காணித்து வருகிறது. அதிக விலை ஏற்றம் எழும் தருணங்களில் மற்றும் உரிய காலமுறைப்படி விலை கண்காணிப்புக் குழு கூட்டப்படுகிறது.

- அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றம் அடையும் போது சூழ்நிலையினை

எதிர்கொள்ளும் வகையில் அரசு, விலை கட்டுப்பாட்டு நிதியினை உருவாக்கி ரூ.100 கோடியினை நிதிய மூலதனமாக ஒதுக்கீடு செய்துள்ளது. வெளிச் சந்தையில் அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றத்தினை கட்டுப்படுத்தும் நோக்கில் ரூ.20 கோடி நிதிய மூலதனத்துடன் ஒரு முறை மானியத்தினைக் கொண்டு 100 அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

- வெளிச்சந்தையில் உயர்ந்து வரும் காய்கறிகளின் விலையேற்றத்தினை கட்டுப்படுத்திடும் வகையில் நுகர்வோர் கூட்டுறவு அங்காடிகள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவை புதிதாக விளைந்த காய்கறிகளை பண்ணைகளில் நேரடியாக கொள்முதல் செய்து, 3 நடமாடும் கடைகள் உட்பட 76

பண்ணை பசுமை காய்கறிக் கடைகள் மூலம் விற்பனை செய்து வருகின்றன.

- வெளிச்சந்தையில் நிலவும் விலை மாற்றங்களினால் எளிதில் பாதிக்கக்கூடிய மக்களை காக்கும் வகையில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.30/-க்கும், ஒரு லிட்டர் பாமாயில் ரூ.25/-க்கும் நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்படுகின்றன.

## இயல் - 4

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

### 4.1 முன்னுரை

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1972 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. பின்னர் இந்நிறுவனம் பிரிவு 25 கம்பெனிகள் சட்டம், 1956ன் கீழ் 01.04.2010 (பிரிவு 8 கம்பெனிகள் சட்டம், 2013) முதல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் என பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கழகம், பொது விநியோகத் திட்டம், சிறப்பு பொது விநியோகத் திட்டம் மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவு திட்டத்திற்கான அத்தியாவசிய பொருட்களை கொள்முதல் செய்தல், சேமித்து வைத்தல் மற்றும் வழங்குதல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

### 4.2 நிறுவனக் கட்டமைப்பு

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமானது, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களை குழும இயக்குநர்களின்

தலைவராகக் கொண்டும் 11 இயக்குனர்களை கொண்டும், இயங்கி வருகிறது.

இந்நிறுவனம், 33 மண்டலங்களாக முதுநிலை மண்டல மேலாளர்கள்/மண்டல மேலாளர்கள் தலைமையில் அனைத்து மாவட்டங்களிலும், சென்னையில் மட்டும் வடக்கு, தெற்கு என இரு மண்டலங்களாக செயல்பட்டு வருகிறது. இக்கழகத்தில் தலைமை அலுவலகம், மண்டல அலுவலகங்கள், கிடங்குகள், நவீன அரிசி ஆலைகள், நியாயவிலை கடைகள் மற்றும் மாநிலம் முழுவதிலும் உள்ள பல்பொருள் அங்காடிகள் ஆகியவைகளில் 7,264 நிரந்தரப் பணியாளர்களாகவும், 2,540 பருவகால பணியாளர்களாகவும், பணியாற்றி வருகின்றனர், இது தவிர, 5,608 சுமைதூக்கும் தொழிலாளர்கள் 14,420 பருவகால சுமைதூக்கும் பணியாளர்கள் கழக கிடங்குகள் மற்றும் நவீன அரிசி ஆலைகளில் பணிபுரிகின்றனர்.

### 4.3 செயல்பாடுகள் மற்றும் சேவைகள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொது விநியோகத்திட்டம் மற்றும் சிறப்பு பொது விநியோகத்திட்டத்திற்கு தேவையான அரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம் பருப்பு, பாமாயில் மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய அத்தியாவசியப் பொருட்களை மாநில அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட விலையில் கொள்முதல் செய்தும், சேமித்து வைத்தும், அவற்றை விநியோகம் செய்திட வழிவகை செய்து வருகிறது. இதற்கென இந்நிறுவனம் பின்வரும் உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டு செயலாற்றி வருகிறது:

1. 12.92 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 287 கிடங்குகள்
2. 1455 நியாய விலைக் கடைகள் (முழுநேரக் கடைகள் 1178 மற்றும் பகுதி நேரக் கடைகள் 277)
3. 21 நவீன அரிசி ஆலைகள்

4. 30 மாவட்டங்களில் 72 அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகள்

5. 22 அமுதம் பல்பொருள் அங்காடிகள் (சென்னை மற்றும் கடலூர் மாவட்டங்கள்)

6. 3 பெட்ரோல்/டீசல் விற்பனை நிலையங்கள்

7. 36 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள்

8. 5 சமையல் எரிவாயு விநியோக முகமைகள்

9. தேவைக்கேற்ப நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் (நடப்பு பருவம் 1763)

**4.4 பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசியப்பொருட்கள்**:

**4.4.1 அரிசி**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொது விநியோகத்திட்டத்திற்குத் தேவைப்படும் அரிசியின் அளவினை தேசிய உணவு பாதுகாப்பு சட்டம் 2013-ன் படி இந்திய உணவுக் கழகத்தின் மூலம் மத்திய தொகுப்பு ஒதுக்கீட்டிலிருந்தும், மீதியை நெல்அரவை மூலமும் பெறப்படுகிறது. இந்திய உணவுக் கழகம்

நிர்ணயித்துள்ள அரிசியின் விற்பனை விலை விவரம் பின்வருமாறு.

| வரிசை எண் | வகை | மாதாந்திர ஒதுக்கீடு (மெ.டன்) | விலை (ரூபாய்/கிலோ) |
|---|---|---|---|
| 1. | அந்தியோதயா அன்னயோசனா | 57,437.202 | 3.00 |
| 2. | முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்கள் | 1,35,783.900 | 3.00 |
| 3. | ஈடு செய் ஒதுக்கீடு | 99,773.138 | 8.30 |
| மொத்தம் | | 2,92,994.240 | |

மாநிலத்தின் பொது விநியோகத் திட்டம் மற்றும் அந்தியோதயா அன்னயோசனா உட்பட இதர நலத் திட்டங்களுக்கு மாதாந்திர அரிசி தேவை 3.15 லட்சம் மெ.டன் ஆகும். அந்தியோதயா அன்னயோசனா, முன்னுரிமைப் பிரிவு மற்றும் ஈடு செய் பிரிவுகளின் கீழ் பெறப்படும் மாதாந்திர ஒதுக்கீடு 2.93 லட்சம் மெ.டன் அரிசியை மாநில அரசு முழுமையாக பயன்படுத்துகிறது.

தற்போதைய பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மாதாந்திர அரிசி நுகர்வு 3.15 லட்சம் மெ.டன் ஆக

இருப்பதால், மைய அரசின் ஒதுக்கீட்டிற்கும், மாதாந்திர பொது விநியோகத் திட்ட நுகர்விற்கும் இடையேயான பற்றாக்குறையை மைய அரசின் வெளிச்சந்தை விற்பனைத் திட்டத்தின் மூலமாகவும் மற்றும் வெளி மாநிலங்களில் உள்ள நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகவும், தேவையான அளவு அரிசியை கொள்முதல் செய்து ஈடு செய்யப்படுகிறது.

**பொது விநியோகத் திட்டத்திற்கான அரிசி இயக்கம்:**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமானது, பொது விநியோகத் திட்டத்திற்கு தேவைப்படும் மாதாந்திர அரிசியினை இந்திய உணவு கழக கிடங்குகளிலிருந்து நகர்வு செய்கிறது. இந்திய ணவுக் கழகத்தில் 31.05.2019 அன்றைய நிலவரப்படி 57 கிடங்குகளில் 11.10 லட்சம் மெ.டன் அரிசி உபரி இருப்பு உள்ளது.

**4.4.2 சர்க்கரை**

பொது விநியோக திட்டத்தின் கீழ் தோராயமாக 32,000 மெ.டன் சர்க்கரை மாதம் ஒன்றுக்கு குடும்ப

அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுகிறது. குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் சர்க்கரை கிலோ ஒன்றுக்கு ரூ.25/- எனவும், அந்தியோதயா அன்னயோசனா குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.13.50/- எனவும் மானிய விலையில் விற்பனை செய்யப்படுகிறது. பொது விநியோகத்திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு சர்க்கரை வழங்கிட அரசினால் கொள்முதல் செய்யப்படும் சர்க்கரையின் சராசரி வெளிசந்தை விலைக்கும், குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் மானிய விலைக்கும் உள்ள வித்தியாசத் தொகை ரூ.515.19 கோடியினை வருடாந்திர கூடுதல் செலவினமாக மாநில அரசு ஏற்று வருகிறது .இத்தொகை மாநில அரசின் உணவு மானியத்தில் ஈடுசெய்யப்படுகிறது.

### 4.4.3 கோதுமை

மத்திய அரசு, தமிழ்நாட்டிற்கு மாதந்தோறும் 13485 மெ.டன் கோதுமையினை தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013-ன் படி நவம்பர் 2016 முதல் ஒதுக்கீடு செய்து வருகிறது. அதன்படி அனைத்து அரிசி பெறும்

குடும்ப அட்டைதாரர்களுக்கும் அவர்களது விருப்பத்திற்கேற்ப நியாயவிலைக் கடைகளில் அரிசிக்கு பதிலாக கோதுமை இருப்பின் அடிப்படையில் விலையில்லாமல் வழங்கப்படுகிறது .

**4.5 சிறப்பு பொது விநியோகத் திட்டம்**

வெளிச் சந்தையில் விற்கப்படும் பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் ஆகிய அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தினை கட்டுக்குள் கொண்டுவரும் பொருட்டு தமிழக அரசு சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக பருப்பு மற்றும் செறிவூட்டப்பட்ட பாமாயில் ஆகியவற்றை கொள்முதல் செய்து குடும்ப அட்டைதாரர்களுக்கு மானிய விலையில் விற்பனை செய்து வருகிறது.

ஒவ்வொரு மாதமும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்திட 20,000 மெ.டன் துவரம் பருப்பு மற்றும் செறிவூட்டப்பட்ட பாமாயில் ஒரு லிட்டர் வீதம், 1,53,00,000 பாக்கெட்டுகள் கொள்முதல் செய்யப்பட்டு மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. இதனால்

ஏற்படும் முழு மானிய செலவினத்தையும் தமிழக அரசே ஏற்றுக்கொள்கிறது.

இத்திட்டத்தின் கீழ் மானிய விலையில் வழங்கப்படும் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் எண்ணெய் ஆகியவற்றின் விவரம் பின்வருமாறு:

| பொருட்கள் | மாதாந்திர ஒதுக்கீடு (மெ.டன்) | வழங்கப்படும் அளவு (குடும்ப அட்டை ஒன்றுக்கு) | விற்பனை விலை |
|---|---|---|---|
| துவரம் பருப்பு | 20,000 | 1 கிலோ | ரூ.30/- |
| செறிவூட்டப்பட்ட சமையல் எண்ணெய்(பாக்கெட்டுகள்) | 1,53,00,000 | 1 லிட்டர் (910 கிராம்) | ரூ.25/- |

## 4.6 நியாய விலை கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை நகர்வு செய்தல்

நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களின் தொடர் இருப்பினை உறுதி செய்யும் வகையில் நியாய விலை கடைகளுக்கான மாதாந்திர ஒதுக்கீட்டில், 60 சதவீதப் பொருட்கள் முந்தைய மாதம் 25-ம் தேதியிலிருந்து நடப்புமாதம் 5-ம் தேதிக்குள் முன்நகர்வு செய்யப்படுகின்றன. மீதம் உள்ள 40 சதவீத பொருட்கள் நடப்பு மாதம் 20 ஆம் தேதிக்குள்

நகர்வு செய்யப்படுகின்றன. இந்நகர்வுகள் முடிவுபெற்ற பின் வரும் மாதத்திற்கான முன் நகர்வுகள் சம்மந்தப்பட்ட அலுவலரிடம் முன் அனுமதி பெற்று நகர்வு செய்யப்படுகிறது. இதன் மூலம் கிடங்குகளிலிருந்து நியாய விலைக்கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் உரிய நேரத்தில் நகர்வு செய்யப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

**4.7 விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்தல்**

பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், இந்திய உணவு கழகத்தின் முகமையாக இருந்து நெல் கொள்முதல் செய்வதற்கு மத்திய அரசு அனுமதித்து அதன்படி 2002-2003 ஆம் ஆண்டு கரீப் கொள்முதல் பருவத்திலிருந்து செயல்பட்டு வருகிறது. மேலும், காவிரி பாசன மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தேசிய கூட்டுறவு நுகர்வோர் இணையம் (NCCF) ஆகியவையும் நெல் கொள்முதல் செய்ய அரசினால் ஆணையிடப்பட்டுள்ளது. கரீப் 2018-2019 கொள்முதல் பருவத்தில், மத்திய அரசால்

அறிவிக்கப்பட்ட நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதாரவிலை மற்றும் தமிழ்நாடு அரசால் விவசாயிகளுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை விவரங்கள் பின்வருமாறு.

| ரகம் | மத்திய அரசு வழங்கும் குறைந்தபட்ச ஆதார விலை குவிண்டால் ஒன்றுக்கு (ரூபாயில்) | தமிழ்நாடு அரசு வழங்கும் ஊக்கத்தொகை குவிண்டால் ஒன்றுக்கு (ரூபாயில்) | விவசாயிகளுக்கு வழங்கப்படும் விலை குவிண்டால் ஒன்றுக்கு (ரூபாயில்) |
|---|---|---|---|
| சன்ன ரகம் (Grade A) | 1770/- | 70/- | 1840/- |
| சாதாரண ரகம் (Common) | 1750/- | 50/- | 1800/- |

**கே.எம்.எஸ் 2018-2019 ஆம் ஆண்டிற்கான நெல் கொள்முதல் விவரம்**

| கே.எம்.எஸ் | திறக்கப்பட்ட நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் | சன்னரகம் (மெ.டன்) | சாதாரண ரகம் (மெ.டன்) | நெல்கொள்முதல் செய்யப்பட்ட மொத்த அளவு (மெ.டன்) | விலை குவிண்டால் ஒன்றுக்கு (ரூபாயில்) | | பயனாளிகளின் எண்ணிக்கை (விவசாயிகள்) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | சன்ன ரகம் | சாதாரண ரகம் | |
| 2018-2019 (31.05.19 வரை) | 1,763 | 10,48,139 | 6,95,616 | 17,43,755 | 1,840 | 1,800 | 4,59,167 |

கரீப் பருவம் 2018-2019 ஆண்டிற்கு மின்னனு (ECS) பரிவர்த்தனை மூலம் விடுவிக்கப்பட்டத் தொகை ரூ.3,180.68 கோடி ஆகும்.

கொள்முதல் விவரங்கள் 2018-2019

(மெ. டன்)

| | | |
|---|---|---|
| தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | : | 17,24,680 |
| தேசியக் கூட்டுறவு நுகர்வோர் இணையம் | : | 7,348 |
| கூட்டுறவுத் துறை | : | 11,727 |
| **மொத்த நெல் கொள்முதல்** | : | **17,43,755** |

விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக ரூபாய் 108,15,05,300/- வழங்கப்பட்டுள்ளது.

### 4.7.1 கண்டுமுதல் அரிசி

விவசாயிகளிடமிருந்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்படும் நெல், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நவீன அரிசி ஆலைகளிலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்

கழகத்திடம் பதிவு செய்துள்ள 346 தனியார் அரவை முகவர்களின் ஆலைகள் மூலமும் அரவை செய்து அரிசியாக்கப்படுகிறது. மாநிலத்தின் மாதாந்திர பொது விநியோகத் திட்டத் தேவையில், அரவையின் மூலம் பெறப்படும் அரிசி போக, மிகுதியாகத் தேவைப்படும் அரிசியில் மாநிலத்திற்குரிய அளவினை இந்திய உணவு கழகத்திலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நகர்வு செய்யப்படுகிறது. நெல் கொள்முதல் செய்வதிலிருந்து அரிசியாக மாற்றப்படுவது வரை ஆகும் செலவின தொகையை மத்திய அரசு நிர்ணயித்த பொருளாதார விலையின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு மானியமாக பெறப்பட்டு வருகிறது.

## 4.8 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் உட்கட்டமைப்பு

### 4. 8.1 சேமிப்பு கிடங்கின் கொள்ளளவு

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மொத்தம் 287 சேமிப்பு கிடங்குகள் 12.92 லட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவுக் கொண்டு செயல்பட்டு

வருகிறது. இவைகளில் 11.10 லட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவுக் கொண்ட 237 கிடங்குகள் கழகத்திற்கு சொந்தமானதாகும். மீதமுள்ள 1.82 லட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவுக் கொண்ட 50 கிடங்குகள் வாடகை அடிப்படையில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து பயன்படுத்தப்படுகிறது. பொது விநியோகத் திட்டப் பொருட்களை பாதுகாப்பாக சேமித்து வைப்பதை உறுதிப்படுத்தவும், அதன் சேமிப்புக் கொள்ளளவினை மேம்படுத்தவும், அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.

அதன்படி அரசு கடந்த எட்டு ஆண்டுகளில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.939.57 கோடி மதிப்பீட்டில் 308 இடங்களில் மொத்தமாக 7.69 லட்சம் மெட்ரிக்டன் கொள்ளளவு திறனுடன் கிடங்குகள் கட்ட ஒப்புதல் அளித்துள்ளது. இதுவரை 5.84 லட்சம் மெட்ரிக்டன் கொள்ளளவு கொண்ட 232 கிடங்குகள் ரூ.587.85 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**4.8.2 சைலோ அமைத்தல் (நவீன நெல் சேமிப்பு கொள்கலன்)**

நாகப்பட்டினம் மாவட்டம், எருக்கூர் கிராமத்தில் 50000 மெட்ரிக்டன் கொள்ளளவு கொண்ட நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய நவீன நெல் சேமிப்பு கொள்கலன் (சைலோ) ரூ.64.27 கோடி மதிப்பீட்டில் கட்டடப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 02.07.2018 அன்று பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டு தற்போது தொடர் பயன்பாட்டில் உள்ளது.

**4.8.3 நியாய விலைக் கடைகள் கட்டுதல்**

தமிழ்நாட்டில் உள்ள 35,279 மொத்த நியாய விலைக் கடைகளில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் மொத்தம் 1455 நியாய விலைக் கடைகள், 26 மண்டலங்களில் செயல்பட்டு வருகின்றன. இதில் 124 கடைகள் சொந்தக் கட்டிடத்திலும், 1115 கடைகள் வாடகை கட்டிடத்திலும் மற்றும் 216 கடைகள் வாடகை இன்றி பிற அரசுத் துறை கட்டிடங்களிலும் இயங்கி வருகின்றன. 125

நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசால் அறிவிக்கப்பட்டு இதுவரை 90 நியாய விலைக் கடைகளின் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

### 4.8.4 நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்டுதல்

விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்வதற்கு நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன. ஒவ்வொரு நேரடி நெல் கொள்முதல் நிலையமும் சுமார் 33 சென்ட் பரப்பளவில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு சேமிப்பு வசதி, உலர்களம், நெல் தூற்றும் இயந்திரம், மின்னனு தராசு, ஈரப்பதமானி ஆகிய வசதிகளை கொண்டுள்ளன. விவசாயிகளிடமிருந்து பெறப்படும் கோரிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் மாநிலம் முழுவதும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன.

விவசாயிகளின் நலனில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மிக முக்கிய பங்கு வகிப்பதால், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு நிரந்தர

கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தருவதை அரசு உறுதி பூண்டுள்ளது. எனவே, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டிடங்கள் கட்டி தரும் நடவடிக்கை படிப்படியாக அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 273 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் சொந்த கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. மேலும், கடந்த 2011-2012 முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை 360 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டிடங்கள் கட்ட அரசால் அறிவிக்கப்பட்டு, அவற்றில் 232 இடங்களில் ரூ.70.75 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### 4.8.5 நெல் உலர்களம் அமைத்தல்

அரசு வரையறுத்துள்ள நெல்லின் ஈரப்பத அளவிற்கு நெல்லினை உலர்த்துவதற்கும், நெல்லினை சுத்தப்படுத்தி தரம் பிரிப்பதனால் ஏற்படும் இழப்பினை தவிர்க்கும் பொருட்டும், டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் நெல்

உலர்களங்கள் அமைக்க அரசால் அறிவிக்கப்பட்டது. மேலும், கடந்த 2011-2012 முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை 435 நெல் உலர்களங்கள் கட்ட அரசால் அறிவிக்கப்பட்டு, அவற்றில் 332 இடங்களில் ரூ.21.42 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**4.8.6 நவீன அரிசி ஆலைகள்**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான 21 நவீன அரிசி ஆலைகளின் மாதாந்திர அரவைத்திறன் 52,500 மெ.டன் ஆகும். 15 நவீன அரிசி ஆலைகளில் புழுங்கல் அரிசியும், 6 நவீன அரிசி ஆலைகளில் பச்சரிசியும் அரவை செய்யப்படுகிறது. அரிசியின் தரத்தை மேம்படுத்திட அனைத்து நவீன அரிசி ஆலைகளிலும், நவீன இயந்திரங்கள் மூலம் செயல்படுவதற்கு ஏதுவாக தமிழ்நாடு அரசினால் கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டு படிப்படியாக மேம்படுத்தப்பட்டு வருகிறது. அவற்றில் முதல் கட்டமாக 7 நவீன அரிசி ஆலைகள் ரூ.26.27 கோடி செலவிலும், இரண்டாவது கட்டமாக 7 நவீன அரிசி ஆலைகள் ரூ.32.60 கோடி செலவிலும்,

நவீனமயமாக்கப்பட்டு நல்ல நிலையிலும் இயங்கி வருகிறது. மூன்றாவது கட்டமாக 2015-2016 ஆம் ஆண்டு முதல் மீதமுள்ள 7 நவீன அரிசி ஆலைகள் ரூ.36.00 கோடி செலவில் நவீனமயமாக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

### 4.8.7 கிடங்குகளின் செயல்பாடுகளை இயந்திர மயமாக்குதல்

தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 11.10 லட்சம் மெ.டன் கொள்ளளவு கொண்ட 237 சொந்த கிடங்குகள் செயல்பாட்டில் உள்ளன. பொது விநியோகத்திட்ட அத்தியாவசியப் பொருட்களை ஏற்றுதல், இறக்குதல், நகர்வு செய்தல் மற்றும் தேவையான உயரத்திற்கு அட்டியிடுதல் ஆகிய பணிகள் தற்பொழுது சுமை தூக்குவோரால் கையாளப்படுகின்றன. பொது விநியோகத் திட்ட பொருள்கள் தவிர சிமெண்ட் மூட்டைகள் போன்றவற்றையும் இவர்கள் கையாளுகின்றனர். மேலும், கொள்முதல் செய்யப்படும் அத்தியாவசியப் பொருள்கள் கிடங்குகளில் இறக்குதல் மற்றும் சமச்சீர் செய்து சிப்பமிடுதல் போன்ற இதர பணிகளையும்

மேற்கொள்கின்றனர். இவர்களின் பணிகளை எளிதாக்கும் வகையில் தற்பொழுது கட்டப்பட்டு வரும் அதிக கொள்ளளவு கொண்ட கிடங்குகளில் தானியங்கி இழுவை இயந்திரங்கள் (Conveyors), சுமையினை ஏற்றி இறக்கி அட்டியிடும் இயந்திரங்கள் (Stackers), தானியங்கி சுமைதூக்கி (Fork lift) மற்றும் மின்னாக்கிகள் (Generator) போன்றவற்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், கூடுதலாக 2018-2019 ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் உள்ள கிடங்குகளுக்கு மொத்தம் ரூ.40 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் இயந்திரமயமாக்கப்படும் என அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 4.8.8 சேமிப்புக் கிடங்குகள் மற்றும் நவீன அரிசி ஆலை ஆகியவற்றின் அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் உள்ள சேமிப்பு கிடங்குகள் மற்றும் நவீன அரிசி ஆலை வளாகங்களின் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளான சாலை, குடிநீர், கழிவறை, தொழிலாளர் ஓய்வறை மற்றும் பாதுகாப்பு சுற்றுச்சுவர் கட்டுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள நிதியாண்டு 2011-2012 முதல் 2018-2019 வரை ரூ.110.50 கோடி மதிப்பீட்டில் அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 4.8.9 அரியலூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல அலுவலகங்ளுக்கு புதிய கட்டடம் கட்டுதல்

புதிய அலுவலகக் கட்டிடங்கள் தலா ரூ.1 கோடி வீதம் மொத்தம் ரூ.2 கோடி மதிப்பீட்டில் அரியலூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் கட்டுவதற்கு நிதியாண்டு 2016-2017ல் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அரியலூர் மண்டல அலுவலகம் ரூ.1 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 27.02.2019 அன்று பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது. மேலும், திருவள்ளூர் மண்டல அலுவலகப் பணிகள் விரைவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

**4.8.10 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைமை அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைமை அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டிடம் ரூ.4.07 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்களால் நிதியாண்டு 2014-2015-ல் அறிவிக்கப்பட்டது. அதன்படி தலைமை அலுவலக கட்டடம் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 27.02.2019 அன்று திறந்து வைக்கப்பட்டது.

### 4.8.11 குடிமை பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குநர் அலுவலக கட்டிடம் கட்டுதல்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் சென்னை நந்தனம் பகுதியில் குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குநருக்கு ஒருங்கிணைந்த அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 11.12.2013 மற்றும் 12.12.2013 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்களின் கலந்தாய்வுக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. அதன்படி அலுவலக கட்டடம் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 27.02.2019 அன்று பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

**4.8.12 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தொடர் பயன்பாட்டில் உள்ள பழைய சொந்த கிடங்குகளின் கல்நார் மேற்கூரையினை (AC sheet) அகற்றி நவீன இரும்பு தகடு கூரை அமைப்பான (Galvalume sheet) மேற்கூரையினை அமைத்தல்**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 100 கிடங்குகளின் மேற்கூரை அமைப்பான கல்நார் கூரை தகடுகளை அகற்றி, நவீன கூரை அமைப்பான, வர்ணம் தீட்டப்பட்ட, ஸ்திர தன்மை கொண்ட துருப்பிடிக்காத இரும்பு கூரையினை அமைக்க நிதியாண்டு 2018-19-ல் ரூ.45 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் பணிகள் மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவை விதி எண்.110-ன் கீழ் அறிவிக்கப்பட்டுள்ளது.

### 4.9 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் வழங்கப்படும் இதர சேவைகள்

#### 4.9.1 அமுதம் பல்பொருள் அங்காடிகள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னையில் 19 கடைகளும், கடலூரில் 3 கடைகளும் ஆக மொத்தம் 22 அமுதம் பல்பொருள் அங்காடிகளை நடத்தி வருகிறது. இவ்வங்காடிகளில் பருப்பு, தானியங்கள் மற்றும் அன்றாடம் தேவைப்படும் நுகர்பொருட்கள் குறைவான விலையில் விற்கப்படுகின்றன. இதனால் வெளிச்சந்தையில் பொருட்களின் விலையேற்றம் திறம்பட கட்டுப்படுத்தப்படுகிறது. இவ்வங்காடிகளின் மொத்த விற்பனை ஏப்ரல் 2018 முதல் மே 2019 வரையில் ரூ.33.56 கோடி ஆகும்.

#### 4.9.2 அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகள்

அமுதம் பல்பொருள் அங்காடிகள் மட்டுமல்லாது அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பொதுமக்கள் பயனடையும் வகையில் தமிழ்நாடு நுகர்பொருள்

வாணிபக் கழகம் 30 மாவட்டங்களில் 72 பல்பொருள் அங்காடிகளை அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகள் என்னும் பெயரில் செயல்படுத்தி வருகிறது. இவ்வங்காடிகளில் மொத்த விற்பனை ஏப்ரல் 2018 முதல் மே 2019 வரையில் ரூ.7.08 கோடி ஆகும்.

### 4.9.3 பெட்ரோல்/ டீசல் விற்பனை நிலையங்கள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நெய்வேலி, திருப்பத்தூர் மற்றும் பட்டுக்கோட்டையில் பெட்ரோல்/ டீசல் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது. ஏப்ரல் 2018 முதல் மே 2019 வரையிலான நிகர லாபம் ரூ.77.44 லட்சம் ஆகும்.

### 4.9.4 சமையல் எரிவாயு விநியோக நிலையங்கள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், திருச்சி, திருவண்ணாமலை, உதகை, இராமநாதபுரம் மற்றும் மண்டபம் ஆகிய இடங்களில் சமையல் எரிவாயு விநியோக முகவராக செயல்படுகிறது. ஏப்ரல் 2018

முதல் மே 2019 வரையிலான நிகர லாபம் ரூ.1.36 கோடி ஆகும்.

### 4.9.5 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 14 மண்டலங்களில் 36 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்களை இயக்கி வருகிறது. இவற்றுள் 27 சில்லறை விற்பனை நிலையங்களாகவும், 8 சில்லறை மற்றும் மொத்த விற்பனை நிலையங்களாகவும், மற்றும் தனிப்பட்ட மொத்த விற்பனை நிலையம் ஒன்றும் செயல்படுகின்றன.

### 4.9.6 பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடிகள்

பொதுமக்களுக்கு நியாயமான விலையில் புதிய காய்கறிகளை விற்பனை செய்யும் பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடிகள் திட்டம் 20.06.2013 அன்று துவக்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பொது மக்களுக்கு நியாயமான விலையில் காய்கறிகளை விற்பனை செய்வதற்காக பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடி திட்டத்தினை

செயல்படுத்தி வருகிறது. 14 பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடிகளை சென்னையில் நடத்தி வருகிறது. ஏப்ரல் 2018 முதல் மே 2019 வரையில் ரூ.12.59 லட்சம் மதிப்பிலான காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 4.9.7 அம்மா உணவகத்திற்கு உணவுப் பொருட்கள் வழங்குதல்

இதரத் திட்டங்களுடன் கூலித் தொழிலாளர்கள் மற்றும் ஏழை எளியோருக்கு சுகாதாரமான உணவு வழங்கும் பொருட்டு மாநில அரசால் 19.02.2013 அன்று அம்மா உணவகங்கள் துவக்கி வைக்கப்பட்டன. அரசு உத்தரவின்படி அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் அம்மா உணவகங்களுக்கு அரிசியும், சென்னை மாநகராட்சி எல்லைக்குள் செயல்படும் அம்மா உணவகங்களுக்கு அரிசி மற்றும் கோதுமையும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் வழங்கப்படுகிறது. ஏப்ரல் 2018 முதல் மே 2019 வரையிலான காலத்தில் 9465.555 மெ.டன் அரிசியும்,1616.170 மெ.டன் கோதுமையும் இத்திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

## 4.10 இதர சேவைகள்

### 4.10.1 அம்மா சிமெண்ட் விநியோகத் திட்டம்

இத்திட்டத்தின் மூலம் ஏழை மற்றும் நடுத்தர குடும்பத்தினர் பயன்பெறும் வகையில் 50 கிலோ சிமெண்ட் மூட்டை ஒன்று ரூபாய் 190/- க்கு (வரிகள் உட்பட) விற்பனை செய்யப்படுகிறது.

இந்த திட்டத்தின் வாயிலாக தகுதியுள்ள பயனாளிகள் தங்களது கட்டுமான மற்றும் பழுது பார்க்கும் பணிகளுக்கு கீழ்கண்ட அடிப்படையில் சிமெண்ட் மூட்டைகள் வாங்கிக் கொள்ள தகுதி பெறுகின்றனர்.

| | |
|---|---|
| ஆவண ஆதாரம் | அங்கீகரிக்கப்பட்ட திட்ட வரைபடம் அல்லது கிராம நிர்வாக அலுவலர்/ வருவாய் ஆய்வாளர்/ ஒன்றிய மேற்பார்வையாளர்/ ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சாலை ஆய்வாளர் வழங்கும் அங்கீகாரக் கடிதம் |
| கட்டடம் பழுது பார்க்க | குறைந்தபட்சம் 10 மூட்டைகள்<br>அதிகபட்சம் 100 மூட்டைகள் |
| வீடு கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்ட அளவு அதிகபட்சம் 1500 சதுர அடி 100 சதுர அடிக்கு 50 மூட்டைகள் வீதம் | 500 சதுர அடிக்கு - 250 மூட்டைகள் |
| | 501-1000 சதுர அடிக்கு - 500 மூட்டைகள் |
| | 1001-1500 சதுர அடிக்கு - 750 மூட்டைகள் |

தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தால் ஒதுக்கீடு செய்யப்படும் சிமெண்ட் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

அம்மா சிமெண்ட் விற்பனை விவரம் ஏப்ரல் 2018 முதல் மே 2019 வரை

| ஆரம்ப இருப்பு (மூட்டைகள்) | வரவு (மூட்டைகள்) | மொத்தம் (மூட்டைகள்) | மொத்த விற்பனை (மூட்டைகள்) | இறுதி இருப்பு (மூட்டைகள்) | மூட்டை ஒன்றிற்கு ரூ.3.50 வரை விற்பனை வரவு (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| 28,718 | 82,93,989 | 83,22,707 | 82,71,991 | 50,716 | 2,89,51,968.50 |

### 4.10.2 அம்மா உப்பு விற்பனை

மக்களின் அயோடின் குறைபாடுகளை களையும் வண்ணம் பொது மக்களின் பயன்பட்டிற்கு சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு, இருமடங்கு செறிவூட்டப்பட்ட உப்பு மற்றும் குறைந்த அளவு சோடியம் உப்பு ஆகிய மூன்று விதமான உப்புகள் தமிழ்நாடு உப்பு நிறுவனம் மூலம் பெறப்பட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அமுதம் பல்பொருள் அங்காடிகள், அம்மா அமுதம் பல்பொருள்

அங்காடிகள் மற்றும் நியாய விலைக் கடைகள் மூலமாக பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இக்கடைகளின் மூலம் மாதந்தோறும் சராசரியாக 235 மெ.டன் உப்பு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

### 4.10.3 ஊட்டித் தேயிலை மற்றும் TANTEA

தமிழ்நாடு அரசு ஆணையின்படி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நியாய விலைக் கடைகள், அமுதம் பல்பொருள் அங்காடிகள் மற்றும் அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகளின் மூலம் ஊட்டித் தேயிலைத் தூள் 100 கிராம் ரூ.19/- என விற்பனை செய்யப்படுகிறது. மேலும், அரசு TANTEA-யினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அமுதம் பல்பொருள் அங்காடிகள் மூலம் விற்பனை செய்ய ஆணையிட்டுள்ளது. TANTEA – தூள் 100 கிராம் பாக்கெட் ஒன்றிற்கு ரூ.21/- என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 4.11 தகவல் தொழில் நுட்பம்

#### 4.11.1 கண்காணிப்பு முழு கணினிமயமாவதை கண்காணித்தல்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்படும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் முழு கணினிமயமாக்குதல் திட்டம் துவங்கப்பட்டு, (End to End Computerisation) பொது விநியோகத்திற்காக மேற்கொள்ளப்படும் கொள்முதல் பணிகள் துவங்கி குடும்ப அட்டைதாரர்களிடம் விநியோகம் செய்யப்படும் நிலை வரை கண்காணிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு உணவுப்பொருட்கள் விநியோகிக்கும் முறைகள் எளிமையாக்கப்பட்டு உடனடியாக ஏற்பளிப்பு வழங்கப்படுகிறது. மேலும், கிடங்குகளிலிருந்து நியாய விலை கடைகளுக்கு வழங்கப்படும் அனைத்து நிகழ்வுகளும், G2G வலைதளம் மூலம் கண்காணிக்கப்படுவதுடன் பொருட்களை பெற்றுக் கொண்டைமைக்கான ஒப்புகையும் விற்பனை முனைய இயந்திரம் மூலம் வழங்கப்படுகிறது. கிடங்குகள் மற்றும் சில்லரை அங்காடிகளில் உணவுப்பொருட்களின் இருப்பு விவரம் MIS

இணையவழி மூலமாக துல்லியமாக அவ்வப்போது கண்காணிக்கப்படுகிறது. பொது விநியோகத் திட்டத்தின் அனைத்து நிகழ்வுகளையும், www.tnpds.gov.in என்ற இணையதளம் மூலம் அனைத்து பொதுமக்களும் அறிந்து கொள்ளும் வகையில் இச்சேவை தமிழக அரசின் மூலம் நடைபெற்று வருகிறது.

**4.11.2 மின்னனு கொள்முதல்**

டெல்டா மற்றும் இதர மாவட்டங்களில் நெல் கொள்முதல் முறைகள் முழுமையாக கணினிமயமாக்கப்படும் வகையில் விவசாயிகளிடம் பெறப்படும் நெல்லுக்கான கொள்முதல் தொகையினை மின்னனு முறையில் (ECS) அவரவர் வங்கி கணக்கிலேயே வரவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**4.11.3 இணைய வழி கண்காணிப்பு :-**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் உள்ள 260 கிடங்குகளில் செயல்படும் 3,000 லாரிகளில் GPS கருவிகள் பொருத்தப்பட்டுள்ளது. மேலும், 2,869

CCTV கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் கிடங்குகளை கண்காணிக்க ஏதுவாக கிடங்கு மென்பொருளை இணைய பயன்பாட்டு மென்பொருட்களுடன் இணைத்தும் மற்றும் நவீன கட்டுப்பாட்டு அறை அமைத்தும் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 4.12 தரக்கட்டுப்பாடு

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாகம் நன்றாக வடிவமைக்கப்பட்ட தரக்கட்டுப்பாட்டுத்துறை செயல்பாட்டினால் ஒவ்வொரு வட்ட செயல்முறை கிடங்கிலும், அறிவியல் முறைப்படி செம்மையாக சேமித்து வைக்கப்படும் அரிசி, கோதுமை, சர்க்கரை, பருப்பு மற்றும் பாமாயில் போன்ற உணவுப்பொருட்களின் தரம் தொடர்ச்சியாக அளவிடப்படுகிறது. அவ்வப்போது உணவுப் பொருட்களின் மாதிரிகள் எடுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு தரம் 100% உறுதி செய்யப்படுகிறது. விஞ்ஞான முறையில் கிடங்குகள் அமைக்கப்பட்டு காலமுறைப்படி பூச்சிக்கொல்லி மருந்துகள்

தெளிக்கப்பட்டும், புகை மூட்டம் செய்யப்பட்டும், தரத்தினை பாதுகாக்கவும் சேமிப்பு இழப்பைத் தடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், உணவுப்பொருட்களின் ஈரப்பத அளவினை அறிய ஈரப்பதமானி, பகுப்பாய்வு செய்வதற்கான ஆய்வக உபகரணங்கள், புகை மூட்டம் செய்ய கருப்பு உறைகள், அட்டி அமைக்க இரும்பு மற்றும் பாலி பெல்லட் அட்டி கட்டைகள், புற ஊதா விளக்குப்பொறி மற்றும் மருந்து தெளிப்பான் போன்ற உபகரணங்களை கொண்டு பூச்சிகளின் தாக்கத்தை கட்டுப்படுத்தியும், உணவு தானியங்களின் தரம் உறுதி செய்யப்படுகிறது. இதே மாதிரியான தரக்கட்டுப்பாடு நடவடிக்கைகள், நவீன அரிசி ஆலைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 4.13 நிதி நிலை

இந்நிறுவனத்தின் தற்போதைய அனுமதிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம் முறையே ரூ.100 கோடி மற்றும் ரூ.71.73 கோடியாக உள்ளது.

2013-2014 முதல் 2017-2018 ஆண்டுகள் வரை இக்கழகத்தின் விற்றுமுதல் கீழ்க்கண்டவாறு உள்ளது.

| **வருடம்** | | **ரூபாய்(கோடியில்)** |
|---|---|---|
| 2013-2014 | - | 8936.58 |
| 2014-2015 | - | 8422.55 |
| 2015-2016 | - | 10153.42 |
| 2016-2017 | - | 9739.99 |
| 2017-2018 | - | 7853.84 (தோராயமாக) |

2018-2019 ஆம் நிதியாண்டிற்கு ரூபாய். 6000/- கோடி உணவு மானியமாக தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

## இயல் 5

# தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

### 5.1 முன்னுரை

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், விவசாயப் பொருட்கள் மற்றும் இதர வியாபார நிறுவனங்களில் பொருட்களுக்கு தகுந்த பாதுகாப்பு வசதிகள் வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு, விஞ்ஞான ரீதியிலான சேமிப்பு வசதிகளை விவசாயிகள் மற்றும் இதர வியாபார நிறுவனங்களுக்கு வழங்குவதை முக்கிய நோக்கமாக கொண்டு தோற்றுவிக்கப்பட்டது. இது வேளாண் உற்பத்தி (மேம்பாடு மற்றும் சேமிப்புக் கிடங்கு) நிறுவனச் சட்டம் 1956-ன் படி தோற்றுவிக்கப்பட்டு 02-05-1958 முதல் தனது பணிகளை தொடங்கியது.

### 5.2 செயல்பாடுகள்

இந்நிறுவனம் பொருட்களின் சேமிப்பு இழப்பினை கட்டுப்படுத்தவும் பொருட்களின் சேமிப்பு திறனை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாகக்

கொண்டு, சேமிப்புக் கிடங்குகளை கட்டியும், இயக்கியும் வருகிறது. மேலும், சந்தை வாய்ப்புகளை ஆய்வு செய்து சேமிப்பு கிடங்கு வசதிகளை மாநிலம் முழுவதும் உருவாக்கி மாநிலத்தின் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள விவசாயிகள் மற்றும் இதர வியாபர நிறுவனங்கள் தங்களின் உற்பத்தி பொருட்களை சேமிப்பதற்காக இக்கிடங்கு வசதிகளை உருவாக்கியுள்ளது. தற்போது இந்நிறுவனத்திற்கு மாநிலம் முழுவதும் 60 இடங்களில் 270 கிடங்குகள் உள்ளன.

### 5.3 நிறுவனத்தின் அமைப்பு

தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனங்கள் 7 மண்டல அலுவலகங்களாக கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், மேட்டுப்பாளையம், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலியில் செயல்பட்டுவருகின்றன. இம் மண்டல அலுவலகங்கள் முதுநிலை மண்டல மேலாளர்/மண்டல மேலாளர் கட்டுப்பாட்டிலும் மற்றும்

சேமிப்பு கிடங்குகள் அனைத்தும் கிடங்கு மேலாளர்களாலும் நிருவகிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிறுவனத்தின் ஒட்டு மொத்த மேலாண்மையும் மற்றும் கண்காணிப்புப்பணியும் இந்நிறுவனத்திள் 11 (பதினொரு) இயக்குநர்களால் நிர்வாகிக்கப்படுகிறது தலைவர் மற்றும் (5) ஐந்து இயக்குநர்கள் மாநில அரசாலும் இதர 5 ஐந்து இயக்குநர்கள் மத்திய அரசாலும் நியமிக்கப்படுகிறார்கள்.

5.4 **சேமிப்புக் கொள்ளளவு**

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மொத்த சேமிப்பு கொள்ளளவு 7.62 இலட்சம் மெட்ரிக் டன்னாகும். இவற்றில் 7.60 இலட்சம் மெட்ரிக் டன் சொந்த சேமிப்புக் கிடங்குகளிலும், 0.02 இலட்சம் மெட்ரிக் டன் வாடகை வளாகங்களிலும் செயல்படுகின்றது.

**5.5 பயன்பாடு**

இந்நிறுவனத்தின் சேமிப்பு கிடங்குகள், முக்கியமாக இந்திய உணவுக் கழகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், ஆவின், தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகம், சர்க்கரை ஆலைகள், உர உற்பத்தி நிறுவனங்கள், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், இந்திய புகையிலை நிறுவனம், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், தேசிய கூட்டுறவு விற்பனை இணையம், தனியார் வியாபார நிறுவனங்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 2018-2019-ஆம் நிதியாண்டில் மொத்த கொள்ளளவில் 72% சதவீத பயனீட்டு அளவை தொடர்ந்து எய்தியுள்ளது. இந்நிறுவனத்தின் 31/05/2019 முடிய பயனீட்டு அளவு 77 விழுக்காடாகும்.

**5.6 சேமிப்புக் கிடங்கினைப் பயன்படுத்து பவர்கள் மற்றும் இருப்பு வைப்புக் கட்டணத்தில் தள்ளுபடி**

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் அரசு/ பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் விவசாயிகளுக்கு இருப்பு வைப்புக் கட்டணத்தில் கீழ்க்கண்டவாறு தள்ளுபடி அளித்து வருகிறது.

| வ. எண் | சேமிப்புக் கிடங்கு பயன்படுத்துபவர் | பொருள் | தள்ளுபடி (விழுக்காட்டில்) |
|---|---|---|---|
| 1. | விவசாயிகள் | உணவு தானியங்கள் | 30 |
| 2. | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | உணவு தானியங்கள் | 30 |
| 3. | தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் | நோட்டுப் புத்தகங்கள் மற்றும் பாடப் புத்தகங்கள் | 25 |
| 4. | வருவாய்த் துறை | மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் | 20 |
| 5. | கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் | சர்க்கரை | 20 |
| 6. | ஆவின் | பால் பொருட்கள் | 20 |

| வ. எண் | சேமிப்புக் கிடங்கு பயன்படுத்துபவர் | பொருள் | தள்ளுபடி (விழுக்காட்டில்) |
| --- | --- | --- | --- |
| 7. | MFL, IFFCO, FACTமற்றும் KRIBHCO போன்ற பொதுத் துறை உர உற்பத்தி நிறுவனங்கள் | உரம் | 10 |
| 8. | கைத்தறி கூட்டுறவு சங்கங்கள் /தமிழ்நாடு மாநில விற்பனை இணையம், தேசிய கூட்டுறவு விற்பனை இணையம், முதலியன | வேட்டிகள், சேலைகள் விவசாயப் பொருட்களான கொப்பரை, சோளம் முதலியன | 10 |
| 9. | தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் | இந்தியத் தயாரிப்பு வெளிநாட்டு மதுபானம் | 10 |
| 10. | தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் | காகித தயாரிப்புகள் | 30 |
| 11. | இந்திய உணவுக் கழகம் | மத்திய அரசு நிர்ணயிக்கும் சேமிப்புக் கட்டணம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. | |

## 5.7 சேமிப்பு கொள்ளளவை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:

2018 - 2019 ஆம் ஆண்டில் கீழ்குறிப்பிட்டுள்ள புதிய கிடங்கானது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கடந்த6-8-2018 அன்று காணொலி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டது.

| வ. எண் | அமைவிடம் | கிடங்குகளின் எண்ணிக்கை | கொள்ளளவு (மெ.டன்) | மதிப்பீட்டு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|
| 1. | கோபிச்செட்டிபாளையம் கிராமம், பாப்பிரெட்டிப்பட்டி தாலுக்கா, தருமபுரி மாவட்டம் | 1(புதியது) | 5,000 | 6.00 |

நல்லம்பள்ளி சேமிப்பிக்கிடங்கில் கடந்த 16/02/2019 முதல் இந்திய உணவுக் கழகமானது அரிசி மூட்டைகளை சேமித்து வைத்திடும் பணியினை துவக்கியுள்ளது.

## 5.8 சேமிப்பு வசதியை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

### 5.8.1 பூச்சித் தடுப்பு நடவடிக்கைகள்

(அ) கிடங்கில் இருப்புவைத்திடும் சரக்குகளை விஞ்ஞான முறையில் பூச்சித்தடுப்புப் பணியை மேற்கொண்டு உரிய முறையில்பாதுகாக்கும் பொருட்டு பூச்சிதெளிப்பான்கள் மற்றும் சரக்குகளுக்கு புகைமூட்டம் போட்டும் பராமரிக்கப்படுகிறது.

(ஆ) இந்நிறுவனம் அரசுத் துறைகள், அரசு பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகளுக்கு கட்டுமானப்பணிக்கு முந்தைய மற்றும் கட்டுமானப்பணிக்கு பின்னர் மேற்கொள்ள வேண்டிய பூச்சிதடுப்புப் பணியினை மேற்கொண்டு பூச்சித் தடுப்பு நடவடிக்கைகளை செயல்படுத்தி வருகிறது. இந்நடவடிக்கைகள் மூலம் 2018-2019-ஆம் ஆண்டில் இத்தலைப்பில் ரூ. 58.00 இலட்சம் வருவாய் எட்ட உத்தேசித்துள்ளது.

### 5.8.2 பயிற்சி

ஒவ்வொரு ஆண்டும் இந்நிறுவன களப்பணியாளர்களுக்கு இந்திய உணவு தானிய மேலாண்மை ஆராய்ச்சி நிறுவனம் / ஹைதராபாத்தில் பூச்சிக்கொல்லி மருந்துகள் உபயோகம் குறித்தும், தரக்கட்டுப்பாடு குறித்தும் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் பற்றியும் அதனால் ஏற்படும் இழப்புகள் குறித்தும் எடுத்துரைக்கப்படுகிறது.

### 5.8.2 விவசாயிகளுக்கு பயிற்சி

சட்டமன்றத்தில் 02.07.2018 அன்று மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களது அறிவிப்பிற்கிணங்க, இந்நிறுவனம் பிப்ரவரி, 2019ல் "உணவு தானியங்களை விஞ்ஞான முறையில் சேமித்தல் மற்றும் தரக்கட்டுப்பாடு குறித்த விழிப்புணர்வு "ஏற்படுத்தும் வகையில் ரூ.50 இலட்சம் செலவில் ஏழு மண்டல தலைமை இடங்களில் 2,808 விவசாயிகள் மற்றும் கிடங்கு பணியாளர்களுக்கு விழிப்புணர்வு பயிற்சிமுகாம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இம்முகாமில் பங்கேற்கும் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூ.1,180/- மதிப்பிலான ஒரு கைத்தெளிப்பான் வழங்கிட உத்தேசிக்கப் பட்டுள்ளது.

### 5.9 நிதிச் செயலாக்கம்

கடந்து மூன்று ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிதிச்செயலாக்க நடவடிக்கைகள் பின்வருமாறு :-

| விபரம் | 2016-2017 | 2017-2018 | 2018-2019 (தோராயமாக) |
|---|---|---|---|
| (ரூபாய் கோடியில்) | | | |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் (மாநில அரசு மற்றும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் தலா 50%) | 7.61 | 7.61 | 7.61 |
| மொத்த வருமானம் | 65.92 | 69.55 | 64.41 |
| செலவு | 34.74 | 46.58 | 47.90 |
| வரி செலுத்தும் முன் லாபம் | 31.18 | 22.97 | 16.51 |

### 5.10 ஆதாயப் பங்கு

2017 - 2018 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் ஈட்டிய நிகர லாபமான ரூபாய் 17.93 கோடியிலிருந்து முன்மொழியப்பட்ட 30 % ஆதாய பங்காக ரூ.5.38 கோடியினை (ஆதாயபங்கு வருமானவரி நீங்கலாக) தனது பங்கு முதலீட்டாளர்களுக்கு வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 5.11 மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகளின் மீது கடன் வசதிகள்

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் அனைத்து சேமிப்புக் கிடங்குகளையும் “சேமிப்புக் கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறைச் சட்டம், 2007"-ன்கீழ் பதிவு செய்ய நடவடிக்கை மேற் கொண்டுள்ளது. தற்போது மாற்றத்தக்க சேமிப்புக்கிடங்கு ரசீதுகளை மின்னணு படிவம் மூலம் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. இதன் மூலம் சேமிப்புக்கிடங்கு பயனாளிகள் ரசீதுகளை சுலபமாக அடகு வைக்கவோ (அ) மாற்றிடவோ இயலும். மேலும்

பயனாளிகள் மின்னணு சேமிப்புக்கிடங்கு ரசீதுகள் மூலம் சுலபமாக வங்கிக்கடன் பெற இயலும். மேலும் இவ்வசதி மூலம் அவர்களது சரக்குகளை இணையவழி வசதியில் விற்பனை செய்திடலாம். சேமிப்புக் கிடங்கு ரசீதுகளை அடமானம் வைப்பதன் மூலம் தங்களது சரக்கு இருப்பின் மதிப்பில் 60% முதல் 80% வரை கடன் பெற்று வருகின்றனர். 2018-2019 ஆம் ஆண்டில் 365 மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகள் வழங்கப்பட்டு, அவற்றின் மீது ரூ.15.77 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மே மாதம் 2019ல் 94 மாற்றத்தக்க ரசீதுகள் வழங்கப்பட்டு அவற்றின் மீது ரூ. 14.68 லட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. கடந்த பத்து வருடங்களில் இந்நிறுவனம் 30,822 மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகள் வழங்கி அதன் மீது ரூ.4,632 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

# இயல் - 6

# அமலாக்கம்

## 6.1 முன்னுரை

குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை, அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம் 1955, கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்பு சட்டம் 1980-இன் கீழ் மத்திய அரசாலும், மாநில அரசாலும் வெளியிடப்பட்ட பல கட்டுப்பாட்டு ஆணைகளை அமல்படுத்துகிறது. இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் வாயிலாக கைது, கைப்பற்றுதல், பறிமுதல் செய்தல் பறிப்பிழக்க விசாரணை மற்றும் சோதனை மேற்கொள்ளப்படுகிறது. கடத்தல்காரர்களை முன்னெச்சரிக்கையாக 6 மாதம் வரை தடுப்புக் காவலில் வைக்க கள்ளச்சந்தை தடுப்புச் சட்டம் அனுமதிக்கிறது.

## 6.2 குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை - அமைப்பும் அதன் செயல்பாடுகளும்

குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை, காவல்துறை இயக்குநர் தலைமையில் ஒரு காவல் துறைத் தலைவர், 2 காவல் கண்காணிப்பாளர்கள் (சென்னை மற்றும் மதுரை மண்டலம்) மற்றும் நான்கு துணைக் கண்காணிப்பாளர்களை (சென்னை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை) கொண்டு செயல்பட்டுவருகிறது. இந்தத் துறையில் உள்ள 33 அலகுகளில், 22 அலகுகள் காவல் ஆய்வாளர்கள் தலைமையிலும் மற்றும் 11 அலகுகள் காவல் உதவி ஆய்வாளர்கள் தலைமையிலும் செயல்பட்டு வருகின்றன. இதைத்தவிர எல்லையோர மாவட்டங்களான கன்னியாகுமரி , கோயம்புத்தூர், திருநெல்வேலி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் ஐந்து சிறப்பு ரோந்துப் படைகள் இயங்கி வருகின்றன.

## 6.3 குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையின் சாதனைகள்

குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையால் 01.04.2018 முதல் 31.05.2019 வரை 7,403 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு அத்தியாவசியப் பொருட்கள் கைபற்றப்பட்டுள்ளன :-

1. 15,475.12 குவிண்டால் பொது விநியோகத்திட்ட அரிசி மதிப்பு ரூ.1,33,87,578.70
2. 25,699 லிட்டர் மண்ணெண்ணெய் மதிப்பு ரூ. 3,85,485
3. 792 எரிவாயு உருளைகள் மதிப்பு ரூ. 7,12,800

மற்றும் ரூ.15,09,141 மதிப்புள்ள இதர அத்தியாவசியப் பொருட்களான பருப்பு, பெட்ரோல், டீசல், கலப்பட எண்ணெய் போன்ற பொருட்களும் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பு ரூ. 1,59,95,004.70 ஆகும். 6,009 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். 1,550 வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. தென் மாநிலங்களில்

துடிப்புடன் செயல்பட்டு வந்த கடத்தல் காரர்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. உறுதியான முயற்சிகள் தொடர்ந்து நடைபெறுகிறது.

**6.4 கள்ளச்சந்தை தடுப்புக் காவல்**

2018-2019ஆம் ஆண்டு 47 நபர்கள் கள்ளச்சந்தை தடுப்புக் காவல் சட்டம் 1980-ன் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

**6.5 குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறைக்கு புதிய கட்டடம்**

புதிய சொந்தக் கட்டடம் குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை தலைமை அலுவலகத்திற்கு ரூ.4,48,46,435 செலவில் கட்டப்பட்டது. சென்னை நந்தனத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 27.02.2019 அன்று திறந்து வைக்கப்பட்டது. கடந்த 21.03.2019 முதல் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை புதிய அலுவலகத்தில் செயல்படத் தொடங்கியது.

## 6.6 சமுதாய வலைத்தள பகுப்பாய்வு

வலைதளம் மற்றும் வரைபடம் மூலம் சமுதாய அமைப்பைபற்றித் தெரிந்துகொள்வதே சமுதாய வலைத்தள பகுப்பாய்வு என்பதாகும், இத்ததகையப் பகுப்பாய்வுகள், சட்ட அமலாக்கத்தில் குற்றவாளிகள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் பயன்படுத்தும் அலைபேசி எண்கள், அவர்களின் தங்குமிடம்/ பதுங்குமிடம், உடந்தையாட்கள்/ கூட்டாளிகள் மற்றும் அவர்களது தொடர்பு அலைபேசி எண்கள், குற்றவாளிகள் பயன்படுத்தும் வாகனங்கள், அவர்கள் தொடர்பான ஆவணங்களைப் பராமரித்தல் மற்றும் அப்போதைக்கப்போது அனைத்து விவரங்களையும் மேம்படுத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்க உறுதுணையாக இருக்கும்.

## முடிவுரை

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை தொடர்ந்து பெரும் முயற்சி மேற்கொள்கிறது. அத்தியாவசிய உணவுப் பொருட்களை குறித்த நேரத்தில் வழங்குவதற்காக விநியோக முறைகளை சீராக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய பரந்த அளவிலான பொது விநியோகத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்திடவும் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலையினைக் கட்டுக்குள் வைத்திடவும் அரசு தொடர்ந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

நுகர்வோர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது மிக முக்கியமானது என அரசு ஏற்றுக்கொள்கிறது. இது தவிர நுகர்வோர்களின் குறைகளை களைந்திட வலுவான கட்டமைப்பு மற்றும் நுகர்வோர்களுக்கான உரிமைகள் மற்றும் கடமைகளை தெரிந்துகொள்ள விழிப்புணர்வினை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**இரா. காமராஜ்**
**உணவு மற்றும் நுகர்பொருள்**
**வழங்கல் துறை அமைச்சர்**